# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.



| மாலை 1 | ஞாயிறு 20-11-38 வெகுதான்யஹு கார்த்திகைமீ 5உ | முத்து 8 |
| --- | --- | --- |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | சுகாதார மசோதா | .... | 170 |
| 2. | குறிப்பு | ... | 171 |
| 3. | போகிற போக்கில் | ... | 173 |
| 4. | வலைவீச்சு | ... | 175 |
| 5. | பண்டைக்கால கிராம சபை (தி. நா. சுப்பிரமண்யம்) | ... | 176 |
| 6. | ஏழு பருவங்கள் (ஜே. ஜி. சுந்தரம்) | ... | 177 |
| 7. | அந்தணர் தந்த சாபம் (தேவதத்தன்) | ... | 178 |
| 8. | எதிரொலி | ... | 180 |
| 9. | வைட்டமின்ஸ் (என். ஆர். சுப்பிரமண்யம்) | ... | 181 |
| 10. | சென்னைப் பட்டினம் (வே. நாராயணன்) | ... | 183 |
| 11. | விருந்தா வீண் பெருமையா (குமுதினி) | ... | 185 |
| 12. | ஹீராகுணி (டி. என். குமாரஸ்வாமி) | ... | 188 |
| 13. | புஷ்பவனம் ஐயர் (ய. மகாலிங்க சாஸ்திரி) | ... | 190 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# சுகாதார மசோதா

பதவிக்கு வந்த பிறகு மூன்றாவது முறையாக, காங்கிரஸ் சர்க்கார் ஒரு பெரிய மசோதாவை சட்ட சபைக்கு முன் நவம்பர் 28-ம் தேதி யன்று கொண்டு வருகிறார்கள். 10-ம் தேதியன்று பிரசுரமான "சுகாதார மசோதா" மது விலக்கு மசோதாவிற்கும் கடன் நிவாரண மசோதாவிற்கும் அடுத்தபடியாக முக்கியத்துவமும் விசேஷ அம்சங்களும் வாய்ந்தது.

ஒரு முறையில் சுகாதார மசோதா முன்னிரண்டைக் காட்டிலும் கூட சிரமமான முயற்சி என்று சொல்லி விடலாம். முன்னிரண்டைப் போல் இதில் அரசாங்கம் மட்டும் சம்பந்தப்பட வில்லை. ஸ்தல ஸ்தாபனங்களும் இதில் முக்கியமாக சம்பந்தப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் நிர்வாகத்தின் இந்த அம்சத்தில் இருக்கும் தொடர்பைப் போல வேறு எந்த அம்சத்திலும் இல்லையென்று சொல்லி விடலாம். சொல்லப் போனால், இவ்வளவு காலமாக நன்றாக நிர்ணயமாகாமல் 'அந்தரத்தில்' இருந்த இரண்டு ஸ்தாபனங்களின் பொறுப்புக்களையும் பிணைத்து உருப்படுத்தி, சுகாதார முறையில், ஒரு பொதுக் கொள்கையை ஏற்படுத்துவதே இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம்.

இந்த நோக்கத்தை நடை முறைக்குக் கொண்டு வருவதில் சர்க்காருக்கு யோசனைகள் கூறித் திட்டங்கள் அமைப்பதற்காக "சுகாதார போர்டு" ஒன்று ஏற்பாடாகிறது. அதற்கு சுகாதார மந்திரி தலைவர்; சுகாதார டைரக்டர் காரியதரிசி; ஸ்தல ஸ்தாபன மந்திரி, சர்ஜன் ஜெனரல், சென்னை மேல் சபை அங்கத்தினர் ஒருவர், கீழ்சபை அங்கத்தினர்கள் இருவர், இவர்கள் அதில் அங்கத்தினர்கள்.

காரியதரிசியான சுகாதார இலாகா டைரெக்டருக்குச் சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் ஏற்படுகின்றன. சர்க்காரின் சுகாதாரக் கொள்கையை நிறைவேற்றுவது அவர் பொறுப்பு. ஸ்தல ஸ்தாபனங்களிலும் சர்க்காரிலும் சுகாதார இலாகாவிற்கு அவர்தான் தலைவர்.

நாட்டின் சுகாதார நிலைக்கு ஸ்தலப் பொறுப்பாளிகள் ஸ்தல ஸ்தாபனங்கள். அவற்றின் கீழ் இதுவரை சுகாதாரத்திற்கு அதிக வசதி இல்லாததற்குக் காரணம் பணமில்லாதது தான்; ஆகையால் இந்த மசோதாவின்படி ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் வரும்படியில் ஒரு பகுதியை சுகாதாரத்திற்கென்றே ஒதுக்கிவைத்து விட வேண்டுமென்று கட்டாயம் ஏற்படுகிறது.

இந்த மசோதாவிலும் ஜில்லா போர்டுகளின் நிலை ஊர்ஜிதமாவது பற்றித்தான் நாம் வருந்துகிறோம். ஜில்லா போர்டுகளின் மேல் பார்வையில் தற்காலம் வேலை செய்யும் சுகாதார உத்தியோகஸ்தர்கள் சுகாதாரத்திற்குத் தாங்கள் செய்ய வேண்டிய அளவு வேலையைச் செய்வதே இல்லை. அந்த ஸ்தாபனம் அனாவசியம். இனிமேல் புதுச் சட்டத்தின் கீழ் நகர சபைகளும் கிராம பஞ்சாயத்துகளும் தாங்களே சுகாதார சிப்பந்திகளைக் கொள்ளலாம். தாலுகாவிற்கென்றும் ஜில்லாவிற்கென்றும் சுகாதார ஸ்தாபனச் செலவே தேவையில்லை. மேற்பார்வைக்கு வேண்டுமானால், குறைந்த சம்பளத்தில் ஒரு ஜில்லா அதிகாரி இருக்கலாம். ஒரு தாலுகாவிற்கு ஒருவராக இருக்கும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களும் இருவருக்கு மேற்பட்ட வாக்ஸினேட்டர்களும் அவசியமே இல்லை என்பது நமது அபிப்

(174-ம் பக்கம் பார்க்க)

<u>குறிப்பு</u>

# விவசாயத் திட்டம்

சென்னைப் பொருளாதார சங்கத்தின் ஆதரவில் விவசாயத் திட்டத்தைப் பற்றிப் பேசியபொழுது, ஸ்ரீ. க. சந்தானம் சில முக்கியமான யோசனைகள் கூறினார்.

நம் நாட்டில் பெருவாரியான மக்களுக்கு விவசாயம்தான் ஜீவாதாரமான தொழிலாக இருக்கிறது. ஆகையால் தற்சமயம் பொருளாதார அபிவிருத்திக்காகப் போடும் முதல் திட்டம் விவசாயச் சீர்திருத்தமாகத்தான் இருக்கவேண்டும். தொழில் அபிவிருத்தி அவசியம்தான். ஆனால் விவசாய நிலைமையும் அதை ஒட்டிய குடிசைத் தொழில்கள் நிலைமையும் சீரடைய வேண்டியதுதான் இப்பொழுது உடனே கவனிக்கவேண்டிய பிரச்னை. இதை ஸ்ரீ சந்தானம் அழுத்திச் சொல்லி, அப்பேர்பட்ட திட்டத்தில் முதலாவதாகக் கவனிக்கவேண்டிய விஷயம் விவசாயிகளின் பொருளாதார நிலை என்றும் சொன்னார். 'சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும்?' விவசாயியின் ஸ்திதியை அனுசரித்துத்தான் எவ்விதமான சீர்திருத்தமும் செய்யவேண்டும். ஆனால் விவசாய அபிவிருத்தியும் குடியானவனின் பொருளாதார நிலைமையும் பரஸ்பரத் தொடர்பு கொண்டிருப்பதால் குடியானவனின் நிலை உயர்ந்தால் ஓரளவு விவசாய நிலைமையும் சீரடைந்துவிடும் என்று சொல்லலாம்.

கிராமத்தில் விளை பொருள்களின் விலை உயரவேண்டும்; வரிச் சுமை வெகுவாகக் குறையவேண்டும். கடன் சுமையும் குறையவேண்டும். அப்பொழுதுதான் குடியானவன் கையில் பணம் புரளும். மதுவிலக்குச் சட்டமும், கடன் நிவாரணச் சட்டமும் சில இடங்களில் அதற்கு ஓரளவு ஒத்தாசையாக இருக்துமென்பது உண்மை. ஆனால் உண்மையாக கிராமத்தில் சுபிக்ஷம் ஏற்படவேண்டுமானால் விலைவாசிகள் சௌகரியமாக வேண்டும் நிலவரி விகிதமே மாறுதல் அடையவேண்டும்.

நிலவரியைப் பூராவும் புஞ்சைத்தரமாகவே நிர்ணயித்து தண்ணீர்த் தீர்வையை மட்டும் அப்போதப்போது விகிதாசாரப்படி ஏற்படுத்தலாம் என்று ஸ்ரீ சந்தானம் சொல்லுகிறார். அது அவ்வளவு சரியல்ல என்று நமக்குத் தோன்றுகிறது. நிர்வாகத்திற்கு வேலை அதிகமாகுமென்பது மட்டுமல்ல; குடிகளுக்கும் அதனால் அதிகமாக அனுகூலம் இருக்குமா என்பது சந்தேகம். மின்சார சப்ளையைப்போல தண்ணீர் சப்ளையையும் தனியாக்கி விடலாமென்பது சிலர் கொள்கை. பெரிய பண்ணைகள் ஏற்படுத்துவதைப்பற்றி ஸ்ரீ சந்தானம் கூறுவது ரொம்ப ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. நமது நாட்டில் சாகுபடியிலிருக்கும் நிலங்களில் பாதியை நிலச்சுவான்தார்களே உழுது பயிரிடுகிறார்கள். அந்த ஏற்பாட்டைக் கலைத்து சிறு கைப்பற்றுகளையெல்லாம் உலைத்து, பெரும் பண்ணைகளாக்குவது சரியா என்பது தீர ஆலோசிக்கவேண்டிய விஷயம்தான். கிராமத்து உற்பத்திகளை கிராமத்திலேயே செலவழியும்படி செய்வதற்கும் சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும், மொத்தத்தில் கிராம சுய ஆட்சி முறையில் கிராமத்தை தன் அடங்கலாகச் செய்வதற்கும் பெரிய பண்ணைத் திட்டம் அவ்வளவு ஒத்ததா என்பதும் முக்கியமான பிரச்னை. ஆனால் ஒரு கிராமத்திற்குள்ளேயே கைப்பற்றுகளை ஒன்று சேர்க்கும் முறையைப் பரீட்சை செய்து பார்க்கலாம். நமது பழைய சமுதாய முறையைக்கூட திரும்ப ஆரம்பித்துப் பார்க்கலாம்.

## யார் செய்வது?

நவம்பர் 11-ம் தேதி அமெரிக்காவிற்கு ரேடியோ மூலம் பேசியபொழுது இங்கிலாந்தின் மாஜிப் பிரதம மந்திரி ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் கொஞ்சம் வேதாந்தம் பேசினார்.

எல்லா நாடுகளும் ஒன்றுகூடி பழைய கொள்கைகளையும் பிரச்னைகளையும் மறந்து புது வகையில் ஒத்துப்போய், உலக சமாதானத்திற்காக ஒரு திட்டம்போட்டு அதன்படி நடந்தாலொழிய, மியூனிச் போன்ற சில்லரைப் பூசி மெழுகலில் ஒன்றும் உபயோகமில்லை என்றார். அப்படி செய்யாவிட்டால் யுத்த தளவாடங்கள் விஸ்தரிப்பும், நாடுகள் மனப்பான்மையும் போகிறபோக்கில், கூடிய சீக்கிரத்தில் நாகரீகத்தைச் சிதைத்து இருந்த இடம் தெரியாமல் செய்துவிடக்கூடிய ஒரு மாபெரும் யுத்தம் நேர்ந்தே தீரும் என்று எச்சரிக்கை செய்தார்.

இந்த நெருக்கடி சமயக்கில் முன்வந்து நிலைமையை நேர்ப்படுத்தும் வல்லமை கொண்ட வீரன் யார் என்று கேட்கிறார். நாமும்தான் கேட்கிறோம்; தேடித் தேடிக் கூடப் பார்க்கிறோம். லாயக்கான ஆள் மேல் நாட்டில் ஒருவரைக்கூட காணோமே? பிரஸிடென்ட் வில்ஸன் ஏதோ ஒரு சமயத்தில் தோன்றி எதையோ ஒரு சர்வ தேச

சங்கத்தை நிறுவ முயற்சித்தார். அது இன்று வெறும் காலி வீடாக இருக்கிறது.

தேசங்களிடையே போட்டியும் பொறாமையும், சரித்திர சமூகக் காரணங்களாலேற்பட்ட துவேஷமும் இருக்கிற வரையில் லாயிட் ஜார்ஜ் சொல்லுவது நடக்குமா? ஜெர்மனி பிரான்ஸைக் கண்டு கரிக்கிறது; பிரிட்டன் ரஷியாவைத தீண்டமாட்டேனென்கிறது. இந்தமாதிரியான இடையூறுகளையெல்லாம் தாண்டிக்கொண்டு நாடுகள் புத்தி அடைவது எப்பொழுது?

## வழியுண்டு!

லாயிட் ஜார்ஜ் இந்த மாதிரி பேசும் பொழுது, இங்கே காந்திஜி மேல் நாடுகள் போகும் போக்கைக் கண்டித்து மாஜிப் பிரதம மந்திரியின் கேள்விக்குப் பதில் சொல்லுவதுபோல வழி சொல்லுகிறார்.

ஆயுத விஸ்தரிப்பு இந்த நீதியில் ஓடினால் சரித்திரத்திலேயே காணப்பெறாத 'விநாசம் தான் இதன் முடிவாகும். அந்தக் கோரமான முடிவிலிருந்து தப்புவதற்கு அஹிம்ஸைப் பாதையைப் பின்பற்றுவது ஒன்றுதான் வழி என்கிறார் காந்திஜி.

ஆனால் வல்லரசுகள் சாம்ராஜ்யப் பேராசைகளைக் கைவிடவேண்டும். சிறு நாடுகளைக் கொள்ளையடிக்கும் தொழிலை விடவேண்டும். இது மிகவும் புரட்சிகரமான மாறுதலல்லவா? ஒரு தேசமே, பிறந்த நாள் முதல் கடைப்பிடித்து வந்த ஒரு கொள்கையை ஒரு நாளில் கைவிடுவதென்பது சிரமம்தான். ஆனால் ஏன் நடக்காது?

"ஜனநாயகமும் பலாத்காரமும் சேர்ந்து இருக்க முடியாது. இன்று ஜனநாயகங்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாடுகள், ஒன்று சர்வாதிகார நாடுகளாக மாறவேண்டும், அல்லது உண்மையாகவே ஜனநாயக நாடுகளாக வேண்டும். ஆனால் தைரியமாக அஹிம்சைப் பாதையைப் பின்பற்றவேண்டும். தனி மனிதர்கள் தான் அஹிம்சையைக் கடைபிடிக்க முடியும் என்று சொல்லுவது குற்றம்; நாடுகளும் கூட அதை நிச்சயம் கைக்கொள்ள முடியும்"

காந்திஜி இப்படித் தைரியமாகத் தன் முறையே உலகம் கடைத்தேறுவதற்கான வழியென்றும், வேறு வழி கிடையாதென்றும் கூறுவது மேல் நாட்டு ராஜ தந்திரிகள் காதில் விழுமா?

ஆயுதப் பரிகாரணம் செய்ய தைரியம் கொண்ட நாடு இருக்கிறதா? வல்லரசுகளில் ஒன்று இப்படி முன் வந்தால் மற்ற நாடுகள் நிச்சயம் அந்த வழியைப் பின்பற்ற உதவியாக இருக்கும். யார் செய்யப் போகிறார்கள்?


## மாகாணங்களுக்குப் பணம்

மத்திய அசெம்பிளியில் சர்ச்சையிலிருக்கும் வருமான வரி மசோதாவில் 49-வது பிரிவை ரத்து செய்யவேண்டுமென்று மாகாண சர்க்கார்கள் வைசிராய்க்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று ஸர்தார் படேல் மாகாணப் பிரதம மந்திரிகளுக்கு அவசரத் தந்திகள் அனுப்பி இருக்கிறார்.

அந்த செக்ஷனின்படி இந்தியாவிலிருக்கும் பிறநாட்டுக் கம்பெனிகளுக்கும், பிரிட்டிஷ் வாசிகளுக்கும் சில சௌகரியங்களும் விலக்குகளும் இருக்கின்றன. அந்த சௌகரியங்களால் மொத்தம் வருஷத்திற்கு ரூ. 1,30,00,000 வருமான வரி வஜா ஏற்படுகிறது என்று படேல் கணக்கிடுகிறார். அதற்கேற்றாற் போல இங்கிலாந்திலிருக்கும் இந்தியக் கம்பெனிகளுக்குச் சௌகரியம் கிடையாது. அந்த வஜா மூன்றுலட்சம்தான். இந்த செக்ஷன் ரத்தாகி விட்டால் இந்திய சர்க்காருக்கு வருஷா வருஷம் 1,27,00,000 வருமான வரி அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கிறார். நிமேயர் மானியத்தின்படி இந்தத் தொகை மாகாணங்களுக்குச் சேர்ந்தால் மாகாண சுயாட்சியின் கீழ் சர்க்கார்கள் எவ்வளவோ வேலை செய்யலாம். மது விலக்குத் திட்டத்தாலும் மற்ற கஷ்ட நிவாரண திட்டங்களாலும் மாகாண சர்க்கார்களுக்கு இப்பொழுது "பணமுடை" மிகவும் அதிகமாக இருக்கிறது. நம் மாகாணத்தில் மதுவிலக்குத் திட்டத்தால் ஏற்பட்டிருக்கும் கலால்வரும்படி நஷ்டத்தை ஈடுசெய்ய இப்பேர்ப்பட்ட பணம் வந்தால் மிகவும் உதவியாக இருக்கும். நில வரியைக் குறைக்கவோ மற்ற உதவிகள் செய்யவோ சௌகரியமாக இருக்கும்.

இந்த வருமான வரிச் சலுகையில் இருக்கும் தாரதமமியம் மிகவும் அதிகமாக இருப்பதைக் கவனிக்கும்பொழுதும், நமது தேவையைக் கவனிக்கும்பொழுதும் வைசிராய் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது கடமையாகவே ஆகிறது. மாகாண சுய ஆட்சி இன்னும் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வைசிராய் இந்த உதவியை நிச்சயம் செய்வார் என்று நம்புகிறோம்.

# போகிற போக்கில்



கெஞ்சின குரலில், பயந்தோடும் நீரைப்போல் நயந்து, காவேரிக்கரையில், என்னைப் பிச்சை கேட்ட பிச்சைக்காரன் குரலும் சொல்லும் என் மனத்தில் ஓர் அருமையான தத்துவம்போல் அழிந்தன. "வேலை செய்யத் தயாராயிருக்கிறேன், சுவாமி. வேலைதானில்லை. நெல்லை கலம் ஒன்றுக்கு ரூ 1-3-3 விற்றால், ஈசனே, வேலை எங்கு கிடைக்கும்?"

* * *

மேற்கே மேகம் மின்னி இடியிடித்துச் சோணையில் மழை பெய்தால்தானே காவேரியில் வெள்ளம் புரண்டுவரும்? நில பலம் நீர்செழிப்பு அடையும்? அதே மாதிரி, செல்வத்திற்கு நிலையான நெல்லுக்கு நியாயமான விலை கிடைத்தால் தானே இதரத் தொழில்கள் கொஞ்சமேனும் நடைபெறும்? —பயிர்த் தொழிலோ, கைத்தொழிலோ, வாய்த் தொழிலோ, பொய்த் தொழிலோ! தேக புஷ்டிக்கும் ஆரோக்கியத்திற்கும் ரத்த ஓட்டம் இன்றியமையாதது போல தேச வளத்திற்கும், செழிப்பிற்கும் நெல்லின் விலை மூலாதாரமல்லவா? அந்த விலை நியாயமான விலையாயிருக்க வேண்டும். ரத்த ஓட்டம் போல் சாந்தமான சம ஓட்டமாய் இருக்கவேண்டும். ரொம்பவும் ஏறவும் கூடாது. இறங்கவும் கூடாது. ரத்த ஓட்டம் போலவே சுகத்திற்கு "ஹை பிளட் பிரஷரும்" கூடாது, "லோ பிளட் பிரஷரும்" கூடாது. அது போலவே சமூக சுகவாழ்க்கைக்குப் பண்டம் பாடிகளின் விலையே, மேகத்திற்கு மின்னல் கொடி போல, ஈசனளித்த ஒரு அளவுகோலாகும். எல்லாப் பண்டம் பாடிகளின் மேன்மைக்கே நெல்லின் விலைதான் பிரதானமாகும். மணி பார்க்கக் கடியாரத்தின் சிறிய முள் எப்படியோ அப்படித்தான் நெல் விலையும்.

* * *

நெல்லின் விலையென்றாலென்ன? "எகநாமிக்ஸ்" என்ற மனிதனைப் புரட்டி அடிக்கும் சாஸ்திரத்தை நான் பார்த்தவனுமில்லை, கேட்டவனுமில்லை. நியாயமான விலை என்றாலென்ன? சமான்யமான புத்தியைச் செலுத்திப் பார்ப்போம். தினசரி உழைப்பிற்குப் பதிலாய் அவனவனுக்கு வேண்டிய தினசரி அன்ன வஸ்திரத்தை அளித்து அதற்கு மேல் ஆபத்து சம்பத்துக்குத் தேவையான கொஞ்சம் மிச்சத்தையும்கூடக் கொடுக்கும் விலை தான் நியாயமான விலை. எந்தத் தொழிலுக்கும் விலை அளவுகோல் இதுதான். இதுதான்நியாயமானவிலையாகும். தினசரி வேலைக்கு, எந்த வேலையானாலும், எவருக்கும் இரண்டுபடி நெல்லே ஈசன் கட்டளையிட்ட உத்தமமான படி. இந்த சாண் வயிற்றிற்கு அதுவே சுகாதார விதி. இந்த விதியை மீறி சுய லாபத்தையே நாடிச் சிலர் நடப்பதால் இவ்வுலகில் இவ்வளவு கஷ்டங்களெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

* * *

ஒரு மணி நேரம் உழைத்து நூறு ரூபாய் அடைவது "ஹை பிளட் பிரஷரு"க்குக் காரணம் மாத்திரம் அல்ல. உதாரணம்கூட அதுதான். இரவும் பகலும் சேற்றிலும், சகதியிலும் பாடுபட்டும், குடியானவன் தன் உணவிற்கே காசு கொடுத்து அரை வயிற்றிற்குக் கடையில் சீவனில்லாத ரங்கூன் அரிசியை (தஞ்சை ஜில்லாவிலே!) வாங்குவது "லோ பிளட் பிரஷராகும்." இந்தக் கொடுமையை ஹிந்துக்களாகிய நாம்தான் சகிக்கிறோம். இந்த

இரண்டு வியாதிகளும் தேசத்திற்கும் தேகத்திற்கும் நாசந்தான். இந்தத் துயரத்தை மறப்பதற்காகத்தான் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் வெற்றிலையும் புகையிலையும் போட்டுக்கொண்டு, கண்ட இடத்தில் துப்பிக் கொண்டு, சும்மா உட்கார்ந்து வெட்டிப் பேச்சோ, சீட்டாட்டமோ ஆடுகிறார்களென்று நினைக்கிறேன். இந்த இரண்டு வியாதிகளும் அடிமைத்தனம் என்ற குட்டையில் புழுத்துப் பெருகின 'மலேரியா'வைப் போலொத்த ரத்தத்தைச் சாப்பிடும் வியாதிகள். காங்கிரஸ் மந்திரிசபை இதை அல்லவோ முதல்முதலில் தாக்கவேண்டும்? இந்த இரண்டு நோய்களையும் போக்கி நமது வாழ்க்கையில் மறுபடியும் சாந்தத்தையும், சுகத்தையும் உண்டு பண்ண வேண்டும். சிரமமான காரியம்தான்.

* * * *

நமது விவசாயத்தொழிலும் 'ட்யுபர்குலர்' வியாதியஸ்தர்கள்போல் அஸ்திச் சூட்டால் பீடிக்கப்பட்டு இருக்கிறது. வீடு மாறி ஊர் மாறி புதுக் காற்று தேடி புதுத்திட்டம் போட்டு மறுபடியும் தினசரி வாழ்க்கையைச் சீர்திருத்தம் செய்தாலொழிய தாதுபுஷ்டி உண்டாவது அரிது. 'ட்யூபர்குலர்' விஷப் பூச்சியைத் தெரிந்தெடுத்து அதைக் கொல்ல வேண்டும்.

* * * *

நமது நாகரீகத்தைச் செல்லரிக்கும் விஷப்பூச்சி, எல்லா உழைப்புக்கும் சம நியாய விலைத் திட்டம் இல்லாததுதான். அசட்டின் கஷ்ட உழைப்பிற்கு கன்னத்தில் மாத்திரம் ஒரு அறை கொடுப்பதில்லை — வயிற்றிலும் கூடத்தான். கெட்டிக்காரனின் மோசடிக்கு மணிக்கு ஓர் ஆயிரம்பொன் சம்பளம். திருவிழாக் கொண்டாட்டம், ரோஜாப்பூ மாலை, எல்லையில்லாத மரியாதை மட்டு. புரட்டில்லாத முரட்டு வேலைக்குத் தினசரிக் கூலி மூன்று அணா. தந்திர 'தந்தனத்தான' பாட்டிட்ட வேலைக்குத் தினசரி ரூபாய் முப்பது வரையில் சாதாரணமாய் எதிர் பார்க்கலாம். காலையில் சகுனமானால், அல்லது சுக்ர தசையாயிருந்தால், தினசரி ரூபாய் முன்னூறு வரையிலும் கிடைக்கலாம். இருவருக்கும் வயிறு சாண் வயிறே! அப்படியிருக்கும்பொழுது வருமானத்தில் மாத்திரம் என் உழைப்பிற்கு இவ்வளவு வித்தியாசம்? இந்த வித்தியாசம் ஆதியில் எப்படி ஏற்பட்டது? இதன் மூலக்கொள்கை என்ன? சுய நலமா? தேச நலமா? தெய்வீகமா? விசாரிப்போம். விசாரித்தால் வேதாந்தம் வளரும். இதை வாசிக்கும் நண்பர்கள் ஏற்கனவே கொட்டாவி விடுகிறார்கள். எனக்கும் கொட்டாவி வருகிறது. பிழைத்துக் கிடந்தால் அடுத்த வாரம் லகுவாய்ப் பார்ப்போம். பிச்சைக்காரன் வார்த்தையை தட்டக்கூடாது. ஆராய்ச்சி செய்வோம்.


மணி.

---

(170-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராயம். நகரசபையில் இருப்பது போல கிராமப் பஞ்சாயத்திலும் சிப்பந்திகள் இருக்கலாம்; கிராமத்தில் ஒரு முதல் கிளாஸ் வாக்ஸிநேடர் ஸானிடேரி இன்ஸ்பெக்டர் வேலையையும் சேர்த்துப் பார்க்கலாம்.

மாகாணத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதுதான் மசோதாவின் நோக்கம். வியாதிகளை தடுப்பது மட்டுமல்ல; நல்ல உணவும் நீரும் நிழலும் அளிப்பது கூட. இந்த விஷயங்களில் சட்ட சபையின் இஷ்டப்படி காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய நிர்வாகப் பொறுப்பை நிர்ணயித்துக் கொடுப்பது மசோதாவின் வேலை.




## காலனிகளுக்குப் பிறகு?—கடற்படை!

சிலரைப்போல, ஜெர்மனி காலனிகளைத் திருப்பிக் கேட்கிறதே என்று நான் பயப்படவே இல்லை. அவற்றை திருப்பிக்கொடுத்து விட்டால் அவ்விடங்களில் கடற்படை நிலையங்களை ஏற்படுத்தி ஜெர்மனி நமது வியாபாரத்தை உலகத்தின் பல பாகங்களில் கெடுக்கும் என்று பலர் கவலைப்படுகிறார்கள். அதுவும் நடக்கலாம்; ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் அதற்காகவே கவலைப்படவில்லை.

அதில் மற்றொரு மிகவும் முக்கியமான அம்சமிருக்கிறது. அதைத்தான் நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும். நமக்கும் ஜெர்மனிக்கும் வெகுநாளாக காலனிகள் விஷயமாக நடந்துவந்த தகராறுகளில் பூராவும் ஒரு விஷயம் வெட்டவெளிச்சமாகப் புலனாயிற்று. ஜெர்மனிக்குக் காலனிகளில் கிடைத்தால் அது என்ன சொல்லும் தெரியுமா? 'எங்களுக்கு சாம்ராஜ்யமிருக்கிறது ஆகையால் நாங்கள் ஒரு பெரும் கப்பற்படை வைத்துக் கொள்ளவேண்டும்' என்று சொல்லும்.

அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? காலனிகள் கிடைத்தால், கடற்படை தேவை என்று சொல்லுவது இயற்கை தானே? அப்பொழுது இங்கிலாந்தும் ஜெர்மனியும் கடற்படை விஷயமாக ஏற்படுத்திக்கொண்ட விகித ஒப்பந்தம் காற்றில் போகவேண்டியது தான்.

—அட்மிரல் ஸர். ஹெர்பர்ட் ரிச்மண்டு.

## ஏன் சொல்லக்கூடாது?

சத்தியாக்கிரக முறையைக் கைக்கொள்ளலாமென்று நான் ஜெக் தேசத்தவர்களுக்கு மட்டும் சொன்னதின் காரணம், வல்லரசுகளுக்கு நான் அதை சிபார்சு செய்யப் பயப்பட்டேன் என்பதல்ல. அதற்கு முக்கியமான காரணம், அவர்கள் இப்பொழுது தொந்தரவில் இல்லை; ஆகையால் அவர்களுக்கு இப்பொழுது மருந்து தேவையில்லை. ஜெக் நாட்டாரைப் போல அவர்களுக்கு இப்பொழுது வியாதி இல்லை. ஜெக் நாட்டினருக்கு ஏற்பட்டது போன்ற உயிர் போகும் ஆபத்து அவர்களுக்கு இப்பொழுது ஏற்படவில்லை. ஆகையால் நான் இப்பொழுது ஏதாவது அவர்களுக்கு ஓதுவது வீண் சிரமமாகும்.

இந்தியாவிலேயே சத்தியாக்கிரகத்திற்கு பூரணமான வெற்றி கிடைக்காதபொழுது நான் எப்படி வேற்று நாட்டாருக்கு அதை உபதேசிக்க முன்வந்தேன் என்று கேட்கிறார்கள். காங்கிரஸிலேயே அஹிம்ஸையில் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டருப்பதை நான் மறக்கவில்லை. ஆனால், அதற்காக அந்த முறையை மிகவும் அழகாக, உத்கிருஷ்டமாக, ஒரு நாடு பரீட்சை செய்து பார்க்கக்கூடிய ஒரு நிகரற்ற சந்தர்ப்பம் ஏற்பட்டு என் கண்முன் நின்றபொழுது நான் பயங்கொள்ளிபோல, சும்மாவிருப்பதா? மாட்டேன்! என்ன ஆனாலும் அஹிம்ஸையில் எனக்கு இருக்கும் நம்பிக்கை குறையாது. ஒழுங்கு, கட்டுப்பாடற்ற கோடிக்கணக்கான மக்களிடையே அவ்வளவாக வெற்றிபெற வில்லையென்பதால் தைரியமும் கட்டுப்பாடும் பெற்ற ஒரு சிறு நாட்டில் அது வெற்றிபெறக் கூடாதா? நம் நாடுதான் அஹிம்ஸைக்கே அவதாரம் செய்த நாடா? நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு இதுதான் சரியான முறை என்பது எனது திடமான கொள்கை. அவ்வளவு தான்.

ஆனால் வல்லரசுகள் அஹிம்ஸைப் பாதையைப் பின்பற்றினால் நானா வேண்டாமென்கிறேன்?

—காந்திஜி.

# பண்டைக்கால கிராம சபைகள்

(தி. நா. சுப்பிரமணியம்)

பண்டைக்காலத்திலே அரசன் ஈச்வராம்சமாகவே கருதப்பட்டான். அவன் தெய்வத்திற்கு அஞ்சிக் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியே நடந்து வந்தான். எல்லா அதிகாரங்களையும் அரசனே தலைமை பூண்டு செலுத்தி வந்தான். மந்திரிகளைக் கலந்து அவர்களுடைய உதவியைப் பெற்றே ராஜ்ய நிர்வாகம் செய்து வந்தான் எனினும் அவன் எதையும் தான் விரும்பியவாறு செய்து முடிக்கும் உரிமை பூண்டவன்.

ஆயினும், அக்காலத்திலேயே பொதுக் காரியங்களில் பல கிராமங்களிலும் நகரங்களிலும் வசிக்கும் மக்களே கவனித்து வருமாறு விடப்பட்டிருந்தன. அநேகமாக ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சபை இருந்து வந்தது. கிராமத்தில் உள்ள ஆண் மக்கள் யாவரும் ஊர்ச் சபையின் உறுப்பினர். அவர்கள் தேர்ந்தெடுத்த ஆளுங்கணத்தாரே நிர்வாகத்தை நடத்தி வந்தனர். கிராம ஆட்சி முழுவதையும் அவர்களே நடத்தி வந்தனர் என்று கூறலாம்.

இப்பொழுது கார்ப்பொரேஷன், முனிசிபாலிடி, பஞ்சாயத்து என்று பலவகைப்பட்ட சங்கங்கள் இருப்பன போலவே முற்காலத்திலும் பலவகைச் சங்கங்கள் இருந்தன. அவற்றுள் ஊர், சபை ஆகிய இரண்டும் முக்கிய மானவை.


பண்டைக்காலத்தில் வழக்கிலிருந்த சங்கங்களுள் 'ஊர்' தான் சாமானியமானது. இந்த வார்த்தை கிராமத்தையே குறிக்கும். எனினும் "ஊராயிசைந்த ஊரோம்" என்று கல்வெட்டுக்களில் காணப்படும் பகுதியினின்றும் அது ஒரு சங்கத்தையே குறிக்கும் என்பது விளங்கும். இதுவே அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் இருந்தது.

சபை என்பது பிராமணர்கள் குடியேறி இருந்த சதுர்வேதி மங்கலத்தில் இவ்விதம் இருந்த கூட்டத்தின் பெயராகும். பழையகாலத்து அக்கிரகாரங்களில் பல, அரசர்களால் கொடுக்கப்பட்ட நிலதானங்களைக் கொண்டே ஏற்பட்டனவாகும். இங்ஙனம் நாட்டின் பல பாகங்களில் குடியேறிய 'நல்கூர் நல்பார்ப்பார்' தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் 'சபை'களின் மூலமாக நடத்தி வந்தார்கள்.

சில இடங்களிலும் மேலே கூறிய இருவகைச் சபைகளும் இருந்து வந்தன. அப்படிப்பட்ட இடங்கள் பொதுவாகப் பெரிய பட்டணங்களாகவோ மங்கலங்களாகவோ, அதாவது அக்கிரகாரங்களாக மாற்றப்பட்ட பழைய கிராமங்களாகவோ இருக்கும். அவற்றைப் போலவே வைதிக மதத்தை அனுஷ்டிப்பவர்களும் ஜைனர்கள் முதலியோரும் வசித்து வந்த இடங்களில் தேவதானத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பள்ளிச்சந்தத்தைச் சார்ந்தவர்களுக்கும் தனித்தனிச் சபைகள் இருந்தன. சாத்தமங்கலம் என்னும் இடத்தில் இவ்விதமான இரண்டு சபைகள் இருந்தனவென்பதும், கிராமப் பொதுவில், குளத்துக்கும் பூந் தோட்டத்துக்கும் நிலத்தை ஒதுக்கி அவற்றின் தீர்வையை நீக்கியதில் அவை இரண்டும் சம்மதித்தன வென்றும் ஒரு கல்வெட்டில் காணப்படுவதினின்றும் இது தெரிய வருகின்றது.

வியாபாரிகள் முதலானோருக்கும் 'வளஞ்சியத்தார்' 'நகரத்தார்' 'மணிக்கிராமத்தார்' என்பன போன்ற தனிச் சபைகள் இருந்தன. இவற்றைத் தவிர, கோயில் நிர்வாகம் நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றைக் கவனிப்பது போன்றவற்றுக்கும் தனியே சபைகள் இருந்தன. இவ்விதமான சபைகளுள் பெரும்பாலன ஒன்றற்கொன்று தொடர்புடையனவாகவே இருந்தன.

சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளவற்றைப் போலவே ஒவ்வொரு நாட்டுக்கும் 'நாட்டார்' என்ற சங்கம் இருந்து வந்தது. இவ்விதமாக இருந்த பல சபைகளும் எவ்விதம் நியமிக்கப்பட்டன. எந்த எந்தக் காரியங்களை நடத்தி வந்தன என்பன போன்றவற்றை மற்றொரு முறை கூறுவோம்.



# ஏழு பருவங்கள்

(ஸ்ரீ. ஜே. ஜி. சுந்தரம்)

நானிலம் அனைத்தோர் நாடக சாலை
மானிடர் எல்லாம் மற்றதன் நடிகர்,
ஆங்கவர் எவரும் தோன்றுவர் அகல்வர்
பாங்குடன் ஒருவன் ஆங்குப் பல்வகை
வாழ்நாள் கூத்தென வரைவன யாவும்
ஏழ்பரு வத்தால் இயங்கிடல் ஆகும்.

ஆயாள்கைச் சிசுவாய் அழுகையும் வாந்தியும்
ஓயாமல் எடுக்கும் ஒருமுதற் பருவம்.

செந்திரு வதனம் சிணுங்கி முணங்கி
நந்துபோல் ஊர்ந்து நான்ற பையுடன்
மெள்ளச் செல்லும் பள்ளிப் பையன்
கொள்ளும் இரண்டாம் பருவக் கூத்தன்.

ஊதுலைக் கனல்போல் உள்ளுற வெதும்பும்
காதல் மெலிவால் கவிகளும் மலர,
ஆராக் காதல் அணங்கைப் புகழ்ந்து
பாராட்டி வாழும் பருவம் மூன்றே.

ஆசை 'பலசூழ்' ஆணைகள் அறைவோன்
மீசையும் தாடியும் மேல்முளை கொண்டு
சிவிங்கி போலும் நிவிரல் ஆக
அவியும் குமிழி அன்ன உலகின்
கீர்த்தியே நாடிக் கிளரும் பொறுமை
ஆத்திரம் அவசரம் அதிகம் நிறைந்து
பீரங்கி முனையிலும் பேரமர் விழையும்
வீரனும் பருவம் விளங்கும் நான்கே.

உருண்டு வரிபடிந் துற்றபெரு வயிறு,
வெருட்டிய பார்வை வெட்டிய மீசை,
நூதன எதுடன் நுட்ப மொழிபகர்
நீதி பதியென நிகழ்வது ஐந்தாம்.

ஆறும் பருவம் அடையும் மனிதன்
வீறுப் பொடுங்கி வழுவி வீழ்வுறும்
காற்சப் பாத்துடன், கண்ணாடி மூக்கில்
தோற்பை தன்னொடும் தோன்றுவ னன்றி,
வேணவாக் கொண்டு விருத்தப் பொழுதில்
பூண வென்றே பூட்டிவைத் திருந்த
பண்டை மேல் ஜோடு பருத்திடக் காண்பன்
கெண்டைக் காற்சதை சுண்டிய படியால்
மூச்சின் மெலிவால் முரட்டொலி நீங்கக்
கீச்சிடும் சிசுகுரல் கிளத்தலும் செய்வன்.

ஈறுகத் தோன்றும் ஏழாம் பருவம்
ஏறுங் கடைசி இழவின் காட்சி
பல்லும் போகும் சொல்லும் போகும்
நல்லியல் ருசியும் நயனமும் கெடுமே.
எச்சம் அடையும் எவ்வகை உறுப்பும்
பொச்சாப்பு மிகவே போதங் குறைந்து
மற்றொரு மகவாய் முற்றும் நடிக்க
இற்றுக் கழியும் இவன்நா டகமே.

[ஷேக்ஸ்பியர் நாடகம் : "விரும்பிய
விதமே" அங்கம் 2 காட்சி 7.]

சரித்திரக் கதை.

# அந்தணர் தந்த சாபம்

(தேவதத்தன்)

தஞ்சாவூர் ஜில்லாவில் சீர்காழிக்குச் சமீபத்தில் திருவெண்காடு என்ற புண்ணியஸ்தலம் ஒன்றுண்டு. அங்கே கோயில் கொண்டிருக்கும் சுவேதாரண்யேசுரர் வீரபத்திரமூர்த்தி இவர்கள் ஆலயம் பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்டதென்றாலும் அழுத்தமாகவும் வேலைப்பாடாகவும் இருக்கும். ஆனால் அதன் கோபுரங்களில் ஒன்று மட்டும் மற்றவையைப்போல் முடிக்கப் படாமல், பாதி கட்டி நிறுத்தி விடப்பட்டாற் போல் காணப்படும். இதற்குக் காரணமாக அவ்வூரார் சொல்லும் ஐதிகம் ஒன்றுண்டு.

தஞ்சையில் மஹாராஷ்டிர மன்னர் அரசு புரிந்து வந்த காலததில் அவர்களுக்குத் தானாதிகாரியாய் விளங்கினவர் அய்யாவைய்யர் எனபவர். அவர் சோழராஜதானியாயிருந்து இப்பொழுது குக்கிராமமாயிருக்கும் காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த பெரிய தனவந்தர். சிறந்த சிவபக்தர் ஊரில் இருந்தால் நாள் தவறாமல் திருவெண்காடு சென்று ஸ்வாமி தரிசனம் செய்துதான் இரவில் போஜனம் செய்வது. அச்சமயம் தஞ்சையை ஆண்டுவந்த மன்னருக்கு வெகுநாள் குழந்தையில்லாமலிருந்து புருஷப் பிரஜை பிறந்த செய்தி கேள்விப்பட்டு தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தி, அரசரை மகிழ்விக்க எண்ணித் தங்கத் தொட்டிலும் அதற்கு வெள்ளிச் சங்கிலியும் செய்து கொண்டு போய் மன்னருக்குக் காணிக்கை கொடுதது அவரால் கௌரவிக்கப்பட்டு ஊர் திரும்பினர். மன்னரிடம் அவருக்கிருந்த செல்வாக்கைக் கண்டு அசூயைப்பட்ட சிலர், அரசன் அன்பைப் பிளக்க இது நல்ல சமயம் என்று கண்டு, தங்கத தொட்டில் பண்ணுவதற்கு வேண்டிய மஹத்தான ஐசுவரியம் நேர் வழியில் அவர் சம்பாதித்திருக்க முடியாதென்றும், அவ்வளவு உயர்ந்த காணிக்கையைக் கேவலம் ஒரு பிரஜை தன் எஜமானனுக்குக் கொடுப்பதே அவன் பணக் கொழுப்பையும் இறுமாப்பையும் விளக்குவதென்றும் பல படியாக அரசன் மனம் கரையும்படி சாடு சொன்னர்கள். அவனும் இவர்கள் வார்த்தையில் மயங்கி அய்யர்மேல் சினங்கொண்டு, கைப்பிடியாய் அவரைக் கொண்டுவரும்படித் தன் சேனைத் தலைவருக்கு உத்திரவிட்டான்.

பகல் பதினைந்து நாழிகை யிருக்கும். அய்யர் சிவபூஜையில் அமர்ந்திருந்தார். அவர் மனைவி அதற்கு நிவேதனங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று யாரோ தெருக்கதவை பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. அந்த அம்மை வெளியே போய்ப் பார்த்தாள். உருவின வாளும் கையுமாய் பத்துக் குதிரை வீரர்கள்நிற்பதைக்கண்டு திடுக்கிட்டாள். அவர்கள் தலைவன் கீழிறங்கி அந்த அம்மாளை வணங்கி, "எஜமானைக் கைப்பிடியாய் அழைத்து வரும்படி மஹாராஜா உத்தரவு" என்று தெரிவித்தான். அய்யர் பூஜையிலிருப்பதாகவும், அவர் ஆகாரம் செய்யக் கொஞ்சம் தாமதமாகும் என்றும் அவள் சொல்லியும், "உடனே கிளம்ப வேண்டும். ஒரு நொடிகூட இங்கே மெனக்கிட முடியாது" என்று அவன் கடிந்து சொன்னன். அந்தப் பெண்மணி, சேவகன் இவ்வளவு முடுக்காய்ச் சொன்ன வார்த்தையைக் கேட்டுப் பயந்து உள்ளே சென்று அய்யரிடம் தெரிவித்தாள். 'அப்படியா?' என்று சொல்லி அவர் சற்றுக் கண்ணை மூடி ஏதோ ஆழ்ந்த யோசனை செய்தவர் போலிருந்து, கண்ணைத்திறந்து ஆசமனம் செய்துவிட்டு, "சரி, நான்போய் வருகிறேன். நைவேத்தியத்தைப் பண்ணிப் பூஜையை எடுத்து வை" என்று சொல்லி வாசலில் வந்து தயாராயிருந்த பல்லக்கில் ஏறிச் சென்றார்.

மறுநாள் மாலை சூரியன் மலைவாயில் செலலும் தருணத்தில பல்லக்கு தஞ்சாவூரை அணுகிற்று. பட்டணத்துக்குள் நுழையவில்லை. வெளியே சிறு புதர்கள் தவிர வேறு எவ்வித மர நிழலும் இல்லாத அந்தரமான வெளியில் சிறிய கட்டடங்கள் சில காணப்பட்டன. அவைகளில் ஒன்றின் முன் பல்லக்கு நிறுத்தப்பட்

டது. பசி தாகத்தால் மிகச் சோர்வு அடைந்திருந்த அய்யர் கீழே யிறங்கின வுடன் அதன் கதவு திறக்கப்பட்டது. அவரை உள்ளே செல்லும்படி குதிரை வீரர்கள் சமிக்கினை செய்ய அவரும் சற்றுத் திகைத்தவராய் உள்ளே அடி வைத்தார். உடனே அச்சிறு கட்டடத்தின் வலுவான இரும்புக் கதவு இழுத்துச் சாத்தப்பட்டது.

உள்ளே ஒரே இருட்டு. தலை மட்டத்துக்கு மேலேயுள்ள ஒரு சாளரத்தைத் தவிர காற்று நுழைவதற்குக்கூட வேறு இடுக்கு இல்லை. ஒரு ஆள் தான் சிரமப்பட்டு உட்காரவோ காலை நீட்டிப் படுக்கவோ செய்யலாம்; அவ்வளவு குறுகலாயிருந்தது அந்த அறை. பெரிய குற்றவாளிகளைச் சிக்ஷிக்கும் பொருட்டுத் தனிக் காவலுக்கென்று ஏற்படுத்தப்பட்ட கொட்டடி ஒன்றில் தான் அடைக்கப்பட்டதை அப்பொழுது தான் அய்யர் உணர்ந்தார். விதியின் கூற்றை அவர் வியந்து ஒன்றும் தோன்றாதவராய்ப் பிரமித்து நின்று கொண்டிருக்கையில் சாளரப்புரத்தில் நிழல்விழுந்தது. யாரோ சில சாமான்களை அங்கு வைத்ததைக் கண்டு அது என்னவென்று பார்த்தார். ஒரு கொட்டங்கச்சியில் கொஞ்சம் அரிசியும், இன்னொன்றில் கொஞ்சம் பருப்பும், ஒரு தகரக் குவளையில் தண்ணீரும் வைக்கப் பட்டிருந்தன. இதைக் கண்ட அவர், 'சிவனே' என்று சொல்லிக் கீழே உட்கார்ந்தார். மூர்ச்சை யடைந்தார்

கொட்டடியில் அடைபட்ட மூன்றும் நாள். மாலைப்பொழுது போக நாலுநாழிகையிருக்கும். வாசலில் உருவின கத்தியும் கையுமாய்ப் பாராவிருந்த சிப்பாய் மூன்று நாளாய் முணுக்கென்ற சத்தமும் காதில் விழாத அவ்விடத்தில் திடீரென்று அண்ட ரெண்டங்களைப் பிளப்பது போன்ற ஒரு ஆரவாரத்தைக் கேட்டு நடுங்கினான். "அகோர வீரபத்திரா! இந்த அநியாயம் அடுக்குமா, உனக்குக்கண்ணில்லையா, உன் கட்டைக் கோபுரம் இடிந்து விழ, உன் ஹாலாஸ்யமணி அறுந்துவிழ", என்ற ஆத்திர வார்த்தைகள் கட்டடத்துக்குள்ளிருந்து கிளம்பவே, கதவுபடீரென்று திறந்தது. சொற்பனத்தில் கண்டதுபோல் சில அதிசயங்களை அவன் கண்டான். ஆயிரக் கணக்கான ஜன நடுவே, மங்கள வாத்தியங்கள் கோஷிக்க, பூர்ண கும்பம் எடுத்து அனேகர் அய்யரை எதிர் கொண்டு வணங்கி, நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட பல்லக்கில் ஏறுமாறு வேண்ட, தெய்வீகத் தேஜஸோடு ஜொலித்த அவரும் ஏறினர். ஊர்வலம் போவதுபோல் அப்பல்லாயிரம் பேர் சூழ்ந்த பல்லக்கு விசையாகக் கிளம்பி அரை நாழிகைக்கெல்லாம் கண்ணுக் கெட்டாமல் மறைந்தது.

மறுநாட் காலை; விடிய இரண்டு நாழிகையிருக்கும். திருவெண்காட்டு சந்நிதித் தெருவிலுள்ள வீட்டுக்காரர்கள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள். தெருவில் மத்தாப்பூ வெளிச்சமும் வாணவேடிக்கையும் வாத்தியங்கள் முழக்கமும் பெரிய விழாப்போல் காணப்பட்டது. ஒன்றும் புரியாமல் கண்ணைக் கசக்கிக்கொண்ட அவர்கள் கூட்டங் கூட்டமாய்ச் செல்லும் ஜனங்களைக் கவனிக்க, "ஒருவன், நம்ம தாத்தாவாட்டமா யிருக்கே, அவரெங்கே வந்தார். செத்துப் போய் முப்பது வருஷமாச்சே" என்றான். அதைக்கேட்டு இன்னொருவன், "அடடே, அதோ பார்த்தாயா, நம்ம கணக்குப் பிள்ளை தோப்பனார் ருமஸாமிய்யர் போராரே, வழக்கப்போலே கமுக்கட்டையில் கச்சாதை இடுக்கிக் கொண்டு" என்று பிரமித்துக் கூவினான். இப்படியிருக்கப் பல்லக்கு நெருங்கிற்று. "காவிரிப்பட்டினத்து அய்யரவர்களன்னா? இதென்ன விந்தை" என்று அவர்கள் வாயைப் பிளந்து நிற்கையில் கோயில் பெருங் கதவுகள் திடீரென்று திறந்தன. அப்பெருங் கூட்டம் முழுவதும் உள்ளே சென்றது. உடனே ஊர் நிசப்தமாயிற்று. துணிவுள்ள சிலர் மெல்லக் கோயிலண்டை சென்று எட்டிப் பார்த்தார்கள். ஒருவித மான சந்தடியுமில்லை. தைரியமாய் உள் சென்றார்கள். சுவாமி சந்நிதியில் அய்யர் அணிந்திருந்த உயர்ந்த ஆடைகளும், திவ்ய ஆபரணக்களும் காணப்பட்டன. அய்யரை பகவான் ஐக்கியம் பண்ணிக் கொண்டு விட்டாரென்றே அந்த ஊரார் தீர்மானித்தார்கள். இன்னொரு ஆச்சரியத்தையும் அவர்கள் கண்டார்கள். ஆயிரக் கணக்கான பொன் சிலவு செய்து அரசனால் கட்டுவிக்கப்பட்ட புதுக்கோபுரம்

இடிந்து விழுந்திருந்தது. தொன்று தொட்ட காலமாய் அடியாரைப் பூஜைக் கழைக்கும் ஹாலாஸ்ய மணியும் அறுந்து கீழே விழுந்து கிடந்தது. மறுநாள் அரசன் அங்கே வந்து தன் கொடிய செயலை நினைத்து பிரும்ம சாபத்துக்குப்பயந்து பரிதபிக்கும்போது தான் அதன் உண்மை அவர்களுக்கு வெளிப்பட்டது.

# எதிரொலி

சினிமாத் தொழில் ஜனங்களின் ஒழுக்க நிலையை திருத்தி உருவாக்கும் ஆச்சரியமான கருவி.

—சாந்தா ஆப்தே பிரசங்கம்.

வாஸ்தவம். தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில், சினிமா வந்து பலபேர்கள் ஒழுக்கத்தைத் திருத்தி உருவாக்கி யிருக்கிறது.

* * *

முஸ்லீம்களும், ஆதித்திராவிடர்களும், கிறிஸ்தவர்களும் ஒன்று சேர்ந்து ஹிந்துஸ்தானி ஒழிப்பு இயக்கத்தை நடத்த வரவேண்டும்.

—சுவாமி அருணகிரி நாதர்.

இந்த ஹிந்து சுவாமியார் முஸ்லீம்களுக்குப் போதனை செய்வதை ஜனுப் ஜின்ன ஆக்ஷேபிப்பார் என்பதை சுவாமிக்கு எடுத்துக் காட்டுகிறோம்!

* * *

நியாயத்திற்கு விரோதமாக நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட குடியேற்ற நாடுகளைப் பற்றி ஒரு சமரஸ ஏற்பாட்டைச் செய்து கொள்வது தான் பாக்கி யிருக்கிறது.

—ஹிட்லர்.

ஐயா! இந்த சமரஸ ஏற்பாடு எல்லாம் உங்களுக்கு எதற்காக? நீங்கள் ஒரு ஏற்பாடு செய்தால் சேம்பர்லேன் என்ன சொல்லப் போகிறார்? நடக்கட்டும், காரியம்!

* * *

எந்த தேசத்திலாவது போதுமான யூதர்கள் இல்லையென்றால் அந்த தேசத்திற்கு எங்களிடம் உள்ள சகல யூதர்களையும் அனுப்பத் தயார்.

—கொயபெல்ஸ்.

இனிமேல் கொயபெல்ஸுக்குத் தாராள புத்தி யில்லை என்று யாராவது சொல்ல முடியுமா?

* * *

பிரதம மந்திரி ஹிந்துஸ்தானியை எடுக்காவிட்டால் பெண்களாகிய நாமும் மறியல் செய்யவேண்டும்.

—ஸ்ரீமதி மீனம்பாள் சிவராஜ்

அந்த மறியலை டிஸம்பருக்கு ஒத்தி வைத்தால் ஒரு கிறிஸ்துமஸ் வேடிக்கையாக இருக்கும்.

* * *

தங்கப் பொடி தூவி மின்னும் சிலந்திப் பந்தலின் கீழ் தம்பதிகள் கல்யாணம் செய்து கொண்டார்கள்

—ஒரு செய்தி

சாதாரணமாக வாய்ப் பந்தல் போட்டு கல்யாணத்தை முடித்து விடுகிறார்கள் என்பதை ஆக்ஷேபிக்க அவர்கள் இப்படிச் செய்திருக்கலாம்.

# வைட்டமின்ஸ்

[என். ஆர். சுப்ரமண்யம். பி. ஏ. பி. எல்]

"ஸார், வைட்டமின்ஸ் ஸார், சாப்பி டுங்கோ."

"வை .........! என்ன?"

அதட்டலாக—"அதான் ஸார் வைட்ட மின்ஸ். எத்தனைதரம் சொல்ரது? பயப் படாமே சாப்பிடுங்கோ, விஷமில்லே. சாப் பிடுங்கோ ஸார். சாப்பிடுங்கோ நானிருக் கேன்."

இப்படி ஒருவர் சொன்னால் என்ன செய்கிறது? என் நண்பர் முதல் முதலில் அன்று என்னை அவர் வீட்டுக்கு அழைத் துப் போனார். அவரோ டாக்டர். அவர் எதைச் சொன்னாலும் சாப்பிட வேண்டி யது தானே? காலையில் வீட்டை விட்டுக் கிளம்பியதும் சகுனத் தடையாக கல் தடுக்கிற்று. "சரி இன்னிக்கு ஏதோ நம க்கு........." என்று சொல்லிக் கொண் டே புறப்பட்டேன். அதன் பயனாக இவ ரிடம் செவ்வையாக அகப்பட்டுக் கொண் டேன். என்ன செய்வதென்று தெரிய வில்லை. என் கலவரத்தைப் பார்த்து அவர் மறுபடியும் ஆரம்பித்து விட்டார்.

"என்ன ஸார்? என்ன? என் பேரிலே நம் பிக்கையில்லையா? அதிலே A...., B...., C ...., D....நாலுமிருக்கு ஸார். விளையாட் டுக்கா சொல்ரேன்?"

"இல்.......லே", என்று ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் தலையைச் சொரிந் தேன்.

"இல்லையா? இருக்கு ஸார். இருக்கு. அதைப்பற்றிச் சந்தேகப்படவேண்டாம்".

"இதேதுரா சனியன்" என்று மனதுக் குள்ளே நினைத்துக் கொண்டு, எனக்கு கொண்டு வைத்திருந்த பதார்த்தத்தைச் சாப்பிடுவதற்கு அதன்மேல் மூடப்பட்டி ருந்த மூடியை எடுத்தேன். எடுத்ததும் எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது. சிரித்தால் மரியாதைக் குறைவு என்று சொல்லுவார்கள். இருந்தாலும் எப் படிச் சாப்பிடுகிறது? முழித்தேன்.

"என்ன ஸார், முழிக்கிறேள்? சாப்பிடு ங்கோ ஸார். அதிலே இரும்பு இருக்கு. தங்க பஸ்மத்தை விடத் தேவலே. உடம் புக்கு ரொம்ப நல்லது. யோஜனை பண்ணு தேங்கோ".

இப்படிச் சொன்னதும், அந்தப் பாத் திரத்தை மறுபடியும் எட்டிப் பார்த்தேன்.

"என்ன பார்க்கிறீர்கள்?"

"A, B, C, D. இருக்குன்னேளே?"

நான் அப்படிச் சொன்னதும் அவர் முகம் ஜ்வலித்தது. "பரியாசம் பண் ரேளா? நன்னாயிருக்கு எனக்கு மரி யாதை."

எனக்கு அவரைக் கண்டதும் பயம் எற் பட்டுவிட்டது. "தயவு செய்து மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு, அந் தப் பதார்த்தத்தைக் கையிலெடுத்தேன். எனக்கு அதைச் சாப்பிட மனம் வரவில்லை. எப்படி அதைச் சாப்பிடுகிறது? கொஞ்சம் ஸங்கோஜப்பட்டேன்.

டாக்டர் என் முகக் கோணலைப் பார் த்து ஆரம்பித்துவிட்டார். "ஸங்கோஜப் படாதேயுங்கோ. என் பேரிலே இன்னும் சந்தேகமா? காந்திகூட சாப்பிடலாம்னு சொல்லியிருக்கிறார். அவரை நம்புவீர்க ளோல்யோ? இதோ பாருங்கோ..." என்று சொல்லிக்கொண்ட உள்ளே போய் ஒரு பத்திரிகையை எடுத்து வந்து காந்தி எழுதி யிருப்பதைக் காண்பித்தார்.

"அவர் சந்நியாசி, எதை வேணாலும் சாப்பிடுவார்" என்றேன்.

"உலகம் இப்படித்தான் முழு மூடங் கள். எது நல்லது? எது கெட்டது? என்று தெரியரதே இல்லே" என்று கோப மாகச் சொல்லி, "சரி, போங்கோ, உங்க ளுக்கு என்னாலே டானிக் கொடுக்க முடியாது ஸார்" என்றார்.

நான் அவர் கோபத்தைத் தணிக்க, "கோபித்துக் கொள்ளாதேயுங்கள். நான் வீட்டில்போய் சாப்பிடுகிறேன்" என் றேன்.

டாக்டருக்கு என் பேரில் நம்பிக்கை யில்லை. இருந்தாலும், தான் ஜயித்து

விட்டதாக எண்ணிக்கொண்டு என் பேரில் அவநம்பிக்கையுடனே கொடுத்தார். நான் கொஞ்சம் நகர்ந்தேன். அவர் என்னை மறுபடியும் கூப்பிட்டு ரகசியமாக "பச்சையாத்தான் சாப்பிடணும். இல்லாவிட்டால் வைட்டமின்ஸ் போய்விடும்" என்றார். நான் அவரை விட்டுத் தப்பிவந்தது ஈச்வரனுக்குத் தான் தெரியும்.

வீட்டிற்கு வந்தேன். அந்தப் பதார்த்தத்தை மூடிக்கொண்டே வந்ததும் என் மனைவி ஆவலுடன்,

"என்ன கொண்டு வந்திருக்கேள்?" என்றாள்.

"வைட்டமின்ஸ்".

"என்ன! வை...!!"

நான் கோபத்துடன் "எத்தனை தரம் சொல்ரது? வைட்டமின்ஸ், வைட்டமின்ஸ், வைட்டமின்ஸ், போறுமா? இன்னொரு தரம் வேணுமும் சொல்ரேன்" என்றேன். நான் டாக்டரிடம் காண்பிக்க முடியாத கோபத்தை யெல்லாம் அவளிடம் செலுத்தினேன்.

"கோவிச்சுக்காதேங்கோ? என்னன்னு சாதாரணமாகத் தானே கேட்டேன்."

"திறந்து பாரேன். தெரியரது. உனக்குப் பிரியமாகக்கொண்டு வந்திருக்கிறேன்" என்றேன்.

ஆவலுடன் திறந்தாள். அந்தப் பாத்திரத்தில் பச்சை முள்ளங்கி.

அவ்வளவுதான், அதன் பிறகு என்னோடே நாலு நாளைக்கு என் மனைவி பேசவில்லை. "A, B, C, D எல்லாமிருக்கு; உடம்புக்கு ரொம்ப நல்லது என்று சொன்னேன்." அவள் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

இதெல்லாம் டாக்டருக்குத் தெரியுமா?

---

மனைவி: "ஒங்க அக்கா பேபிக்கு போட்ட வளையல் தங்கமில்லே."

கணவன்: "ஏண்டி! நீ பெரிய நகை ஷராப்பாய் இருக்கையே! பார்த்தவுடனேயே தங்கம், தங்கமில்லேன்னு உனக்குத் தெரியுமோ?"

மனைவி: "தெரியாது. ஆனால் உங்க அக்காவை எனக்கு நன்றாய்த் தெரியாதோ?"

வாடகைக்கு 'ரூம்' பார்க்க வந்த வாலிபனைப்பார்த்து பாட்டி "ஏண்டாப்பா, பாத்தியோல்லியோ. பொட்டிமாதிரி இருக்கு. இன்னு என்ன வேணும்."

"ஆமாம் பாட்டி, அசல் பொட்டிதான். ஆனால் எனக்கு 'ரூம்' அல்லவோ வேண்டும்?"

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# சென்னைப் பட்டினம்

(வே. நாராயணன். எம். ஏ., எம். எல்)

கடற்கரையிலே உள்ள ஊர்களுக்குப் பட்டினம் என்று பெயர் கொடுப்பது பழைய வழக்கம். பண்டைக் காலத்தில் காவேரியின் சங்க முகத்தில் காவிரிப்பூம் பட்டினம்' என்ற ஊர் இருந்தது. இந்த ஊரிலே பிறந்தவரே 'பட்டினத்தார்' என்னும் பெரியார். பிற்காலத்திலும் கலிங்க பட்டினம், விசாகபட்டினம், பிமிலிபட்டினம், மசூலிபட்டினம், சதுரங்க பட்டினம், நாகபட்டினம் முதலிய ஊர்கள் கீழ் சமுத்திரக் கரையிலே உண்டாயின. இவை போல எழுந்த கடற்கரையூரே சென்னைப் பட்டினம் ஆகும்'

இவ்வூர் ஸ்தாபனமாகி முந்நூறு வருஷங்கள் ஆகின்றன என்றும் முந்நூறும் ஆண்டு நிறைவைக் கொண்டாட வேண்டுமென்றும் சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

முந்நூறு வருஷங்களுக்கு முன்னுலேயே ஆங்கில வர்த்தகர் மசூலிப்பட்டினததில் வியாபார ஸ்தலங்களைக் கட்டிக் கொண்டு தொழில் செய்தார்கள் அவ்வூருக்குத் தெற்கிலே தமிழ் நாட்டிலே வியாபார ஸ்தலமொன்று வேண்டுமென்று அவர்கள் கருதினுர்கள். புலிக்காட்டுக்கு சுமார் முப்பத்தைந்து மைலுக்கு வடக்கே துர்க்காராயன் பட்டினம் என்னும் இடத்திலே வியாபாரஸ்தல மொன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். புலிக்காட்டில் டச்சுக்காரர்கள் இருந்ததால் அவர்களுடன் ஆங்கில வர்த்தகர் போட்டிபோட முடியவில்லை. மேலும் துர்க்காராயன் பட்டினத்தில் கப்பலில் வந்து இறங்குவதற்கு வசதிகள் இல்லை. ஆகையால் இன்னும் தெற்கிலே ஒரு வசதியான ஊரைத்தேடி வந்தார்கள்.

அச்சமயத்திலே வந்தவாசி என்னும் ஊரிலே 'தாமர்லா வேங்கடாத்ரி நாயக்கர்' என்றொருவர் இருந்தார். அவருக்கு விஜய நகர மன்னரின் முக்கிய மந்திரி என்றும் 'கர்நாடகப் பிரதானி' என்றும் விருதுகள் உண்டு. அவருடைய பிரதிநிதியாக அவர் தம்பியார் அய்யப்ப நாயக்கர் பூவிருந்த மல்லிச் சீமையை ஆண்டு வந்தார். அவரிடமிருந்துதான் ஆங்கில வர்த்தகரின் தலைவரான "பிரான்ஸிஸ் டே" என்பார் "மதராஸ் பட்டினம்" என்னும் துறைமுகப் பட்டினத்திலே கோட்டை கட்டிக்கொண்டு வியாபாரஞ் செய்வதற்கு அனுமதி பெற்றார். இவர் பெற்ற அனுமதி 1639 வருஷம் ஜூலை மாதம் 22 தேதி. இந்த அனுமதியிலே இவ்வூர் 'மதராஸ் பட்டினம்' என்று காணப்படுகின்றது.

வேங்கடாத்ரி நாயக்கருக்கும் அவர் தம்பிமார் அய்யப்ப நாயக்கருக்கும் தகப்பனரான சென்னப்ப நாயக்கரின் பெயரால் இவ்வூர் வழங்கவேண்டும் என்று அய்யப்ப நாயக்கர் சொன்னதாகவும் அவ்வாறே ஆங்கில வர்த்தகர் தங்கள் புதிய வியாபார ஸ்தலத்திற்கு 'சென்னப்பப் பட்டினம்' என்று பெயரிட்டதாகவும் இங்கு இருபது வருஷங்களுக்கு அப்பால் ஆங்கில ஏஜண்டாக இருந்த "சேம்பர்ஸ்" என்பவர் தம் நண்பருக்கு எழுதியிருப்பதினின்றும் இவ்வூர் இன்றும் 'சென்னைப் பட்டினம்' என்று வழங்கப் பெறுவதில் காரணம் தெரியவரும்.

நூறு வருஷங்களுக்கு முன்னுல் "பண்டலா ராமஸ்வாமி நாயுடு" எழுதிய ஒரு புஸ்தகத்திலே இவ்விஷயம் வேறொரு விதமாகச் சொல்லப்படுகிறது. 'பேரி திம்மப்பர்' என்பவரின் உதவியால் தமர்லா வேங்கடாத்ரி நாயக்கரிடமிருந்து ஆங்கிலேயர் உத்திரவு பெற்றதோடு நில்லாமல் சந்திரகிரியிலே அரசாண்ட 'ஸ்ரீரங்கராயலு' என்பவரிடமிருந்து எழும்பூர்தொண்டவாடு புதுப்பாக்கம் என்னும் கிராமங்களைப் பெற்றதாகவும் தாங்கள் கட்டும் வியாபார ஸ்தலத்திற்கு வேங்கடப்ப நாயக்கரின் தகப்பனர் சென்னமா நாயக்கர் பெயரால், சென்னப் பட்டினம் என்றொரு வியாபார ஸ்தலத்தையும் சென்ன கேசவப் பெருமாள் கோயில், சென்ன மல்லீசுவரர் கோயில் என்று இரண்டு

கோயில்களையும் கட்டித் தங்களோடு வியாபாரஞ் செய்யும் சுதேச ஜனங்களுக்கு வசதியளிக்க 'பேரிதிம்மப்பர்' உதவினர் என்றும் ராமஸ்வாமி நாயுடு கூறியுள்ளார்.

இவர் 'மதராஸ் பட்டினம்' என்று இவ் வூருக்குப் பெயர் எழுந்ததற்கு ஒரு காரணம் காட்டுகிருர். 'மதுரேசன்' என்ற இந்திய கிறிஸ்துவர் ஒருவருடைய வாழைக் கொல்லையாக இருந்ததாம் ஆங்கிலேயர் கோட்டை கட்டுவதற்குப் பெற்ற நிலம். அவர் தடை செய்தபோது 'பேரிதிம்மப்பர்' அவரைச் சமாதானப்படுத்தி ஆங்கிலேயர் கட்டும் வியாபாரஸ்தலத்திற்கு அவர் பெயர் என்றும் விளங்கும் படி பெயரிடச் செய்தாராம். இப்பெயரே 'மதராஸ் பட்டினம்' என்ருகி பின்பு 'மதருஸ்' என்ருயிற்ரும். இக்கதையை ஏற்றுக் கொள்ளாமல் சில அறிஞர்கள் 'மதராஸ்' என்பது 'மதராஸா' என்னும் அரபிச் சொல்லின் திரிபு என்றும் அக்காலத்திலே கட்டப்பெற்ற "கவர்னர் மாளிகை" மசூதி போல இருந்ததாலே தான் ஆங்கில வியாபார ஸ்தலத்திற்கு 'மதராஸ் பட்டினம்' என்று பெயர் எழுந்தது என்றும் அபிப்பிராயப் படுகிருர்கள்.

---

# புத்தக விமர்சனம்

ஜெக்கோஸ்லோவேகியா (ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா. பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம். விலை ரூ. 1.)

சமீபத்தில் ஏற்பட்ட ஐரோப்பிய நெருக்கடி மக்கள் மனதில் பெருத்த அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. ஜெக்கோஸ்லோவேகியா என்ற இளம் தேசத்தை ஹிட்லர் கூறுசெய்து ஒரு பாகத்தை விழுங்கியது பலாத்காரத்தின் வெற்றியெனத் தவிர வேறல்ல என்பதை எல்லா ராஜ தந்திரிகளும் அறிந்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட அபாக்கிய தேசத்தின் சரித்திர வரலாறுகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிருே மல்லவா?

ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா நம் ஆசையைப் பூர்த்தி செய்திருக்கிருர். ஜெக்கோஸ்லோவேகியாவின் வரலாற்றையும், நெருக்கடியின் விபரத்தையும், அதில் அத்தேசம் நடந்து கொண்ட மாதிரியையும், கடைசியில் அதன் கதியையும் பற்றி மிகவும் ஆராய்ச்சியுடன் எழுதியிருக்கிருர்.

இப்புத்தகம் ஜெக்கோஸ்லோவேகியாவைப் பற்றி மட்டுமல்ல; ஐரோப்பாவின் அரசியல் நிலைமையை மிகவும் தெளிவாக உணர்த்துகிறது. ஜெர்மனியின் நோக்கங்களையும் அதனுல் உலகத்திற்கு நேரவிருக்கும் அபாயமும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஜெக்கோஸ்லோவேகியாவின் தலை குனிந்த வாழ்வு ஜன நாயகத்திற்குத் தலை குனிந்த வாழ்வுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் இதோடு அபாயம் நின்றுவிடுமா? 'ஆனுல் அதற்கு (ஜெக்கோஸ்லோவேகியாக்கு) முன்னும்பின்னும் பலாத்கார சக்தி சதா உறுமிக் கொண்டிருக்கிறதே!' என்று ஆசிரியர் சுட்டிக் காட்டிவிட்டு, 'இன்னும் எவ்வளவு காலம் சுதந்திரக் காற்றை ஜெக்கோஸ்லோவேகியா சுவாசித்துக் கொண்டிருக்கப் போகிறது?' என்று சந்தேகப் படுகிருர். ஆம்; அந்தத் தேசத்தின் எதிர் காலத்தைப்பற்றி யார் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்? பலாத்காரமும் யோக்கியப் பற்றற்ற தன்மையும் ஐரோப்பாவில் நிலவி யிருக்கும்போது எதைப் பற்றியும் ஒன்றும் நிச்சயமாகக் கூறமுடியாது.

கடலுக்கப்பாலிருந்து தமிழ்த் தொண்டு செய்துவரும் ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா நமக்குப் புதியவரல்ல. முஸோலினி, ஹிட்லர் முதலிய புஸ்தகங்கள் மூலம் ஐரோப்பாவைப்பற்றித் தமிழர்கள் நன்ருக அறிந்துகொள்ளுமாறு செய்திருக்கிருர். 'ஜெக்கோஸ்லோவேகியா' என்ற இப்புத்தகம் தமிழர்களின் ஐரோப்பிய அரசியல் ஞானத்தை இன்னும் உயர்த்துமென்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரி அரசியல் அறிவூட்டும் புத்தகங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனுல் துரதிருஷ்டவசமாக அம்மாதிரிப் புத்தகங்கள் தமிழ் நாட்டில் வெளி வருவது அரிதாயிருக்கிறது.

அத்தி பூத்தாற்போல வெளிவரும் 'ஜெக்கோஸ் லோவேகியா' போன்ற புத்தகங்களை தமிழ் மக்கள் ஆதரித்தால், இக்குறை நாளடைவில் நீக்கப்படும்.

# விருந்தா, வீண் பெருமையா?

"குமுதினி"

குஞ்சு அய்யர் ஏதோ காரியமாக ஒரு முறை தென்காசி போக நேர்ந்தது. கிட்டத்தட்ட பதினைந்து ரூபாய்கள் செலவாகிவிட்டன. இருந்தும் திரும்பி வரும்பொழுது வெறுங்கையாக வரவில்லை. ஒரு செவ்வாழைக் கன்று கொண்டுவந்தார். விருதுநகரில் தம்முடைய சிறிய வீட்டின் எட்டடி சதுரமிருக்கும் கொல்லையில் ஒரு மூலையில் ஆழமாகக் குழிவெட்டி, கிடைத்த எருக்களைப் போட்டு அக்கன்றை மிக ஜாக்கிரதையாக நட்டார்.

"ஏய், பசங்களா, இனிமேல் நீங்கள் குளிக்கும் ஜலத்தை வீணுக்காதீர்கள். இந்தக் கன்றுக்கு சேரும்படி செய்யுங்கள்" என்று தமது இரண்டு பிள்ளைகளுக்கும் உத்திரவிட்டார். தமது மனைவி பாத்திரங்களைக்கழுவும் நீரும் அக்கன்றுக்குச் சேருமாறு சிறிய வாய்க்கால் வெட்டி பாத்தி கட்டினர்.

"அப்பா, இதுலே வாழப்பழம் பழுக்குமா?" என்று ஆறு வயதான பெரிய பிள்ளை சுந்தரம் கேட்டான்.

"ஓ, பெரிய பெரிய செவ்வாழை காய்க்கும், தேன் போலிருக்கும்" என்று அவர் சொன்னர்.

"பழுத்தால் ஏழெட்டு நாளைக்குக் குழந்தைகளுக்குப் பக்ஷணம் செய்ய அவசியமில்லை. இதையே கொடுக்கலாம்" என்ருள் சமைத்து அலுத்திருக்கும் அவருடைய மனைவி.

இரண்டு பையன்களுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. சிறியவன் அம்பிக்கு மூன்று வயதாகியும் இன்னும் பேச்சு நன்ருக வரவில்லை. ஆனல் செய்கையில் வீரன். நாள் தவருமல் தான் பல் தேய்க்கும் இரண்டு அவுன்ஸ் ஜலத்தையும் அந்த வாழைக் கன்றிடம் போய்த் துப்புவான். அப்பா குளிக்கும் ஜலத்தையே விடச்சொல்லியிருந்தார். ஆனல் பிள்ளைகள் பல்துலக்குவது எச்சிற்கை கழுவுவது ஆகிய எல்லா ஜலத்தையும் வீணுக்காமல் அக்கன்றுக்கு ஊற்றினர்கள். அத்துடன், முன்பு கண்வர் மகள் தபோவனத்தில் செடிகளுக்கு ஜலம் விடும்போது தன்னுடைய அன்பையும் அளித்தமாதிரி இவர்களுடைய உள்ளத்து அன்பையும் கொடுத்திருக்க வேண்டும். இல்லாவிடில் விருதுநகரின் காய்ந்து உலர்ந்த அந்தக் கருப்பு மண்ணில் இக்கன்று எவ்விதம் உயிர் தரித்தது?

ஏழைக் குடும்பம். ஒவ்வொரு தினமும் குழந்தைகளுக்குக் காலையில் போடும் பழையது வயிறு நிரம்பாது. "அம்மா, இன்னும்" என்பான் அம்பி. "இன்று இது போதும். எழுந்திரு. செவ்வாழை காய்த்ததும் உனக்கு நிறைய கொடுக்கிறேன்" என்பாள் அம்மா. உடனே அம்பி சந்தோஷமாக எழுந்து ஓடி, அந்த வாழைக்கன்றிடம் கை கழுவுவான்.

கடையில் காசு கொடுத்தாலும் சுண்டுவிரல் பெருமனுக்குத்தான் வாழைப்பழம் கிடைக்கும். இவர்கள் வீட்டிலோ தேன் போல் தித்திக்கும் பெரிய பெரிய செவ்வாழைப்பழம் காய்க்கப்போகிறது. இவ்விதம் எண்ணிச் சந்தோஷித்தார்கள் பிள்ளைகள்.

அக்கன்று என்னவோ அந்த மண்ணில் பிழைத்து வளர்ந்தாலும், திடமாக இல்லை. முதல் இலை வெளிவர ஒரு மாதமாயிற்று. பிற்பாடும் மரம் ஒல்லியாகக் குச்சிபோலிருந்தது. முதல் இரண்டு மாதம் வரை "எப்போ காய்க்கும்? எப்போ காய்க்கும்?" என்று கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் நாளாவர்த்தியில் வேறு விளையாட்டுகள் தோன்றவே அம்மரத்தைப் பற்றின ஆசையை இழந்தார்கள். இருந்தும் வீட்டில் செலவழியும் தண்ணீரெல்லாம் வீணுகாமல் அச்செடிக்குச் சேருவது வழக்கமாகி விட்டது. பல் துலக்குவதும், குளிப்பதும் போல தண்ணீரை வாழைக்குத் தவருமல் சேர்த்து வந்தனர்.

வாழையும் சிறிது சிறிதாக உயர்ந்தது. ஏழெட்டு மாதங்களான பின் குஞ்சு அய்யர் அடிக்கடி அதனிடம் சென்று பத்து நிமிஷம் நின்று உற்று நோக்குவார். கண்ணாடி இலை வந்து விட்டதோ, பூ தெரிகிறதோ என்று பார்ப்பார். எந்தக் காரியமும் நாம் ஆவலாக எதிர்பார்த்தால் அச்சமயம் நடப்பதில்லை யல்லவா? காபிக்கு அடுப்பில் தண்ணீர் வைத்தால், அதைப் பார்த்துக்கொண்டே இருந்தோமானால் கொஞ்சத்தில் கொதி வராது. தபால்காரன் இன்று கட்டாயம் நமக்குக் கடிதம் கொண்டுவருவானென்று அவன் வழியைப் பார்த்தால் அவன் நிச்சயம் நம்முடைய வீட்டு வழியே திரும்பிப்பாராமல் போவான். கன்று வைத்த பத்து மாதங்களான பின் அய்யர் வாழை தார் போடுமென்று எதிர்பார்ப்பதை விட்டுவிட்டார்.

ஆனால் அவ்வாழை தன்னுடைய கடமையை மறக்கவில்லை. கௌசல்யாதேவி பன்னிரண்டுமாதம் பூரண கர்ப்பம் தரித்த பின்பே ஸ்ரீராமபிரானைப் பெற்றனராம். அய்யரின் செவ்வாழையும் பன்னிரண்டு மாதங்கள் நிரம்பியதும் திடீரென்று ஒரு தினம் தொங்கும் பூவுடன் விளங்கிற்று. அய்யரின் சம்சாரம்தான் அதை முதன் முதலில் பார்த்தாள். அய்யர் வெளியே போயிருந்தவர் பகல் பன்னிரண்டு மணிக்கு வந்து சாப்பிட உட்கார்ந்ததும் "வாழை தார் போடப்போகிறது. பூவைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள்.

"நிஜமாகவா?" என்று சொல்லி பரிசுத்தி செய்ய கையில் எடுத்த நீரை உதறிவிட்டு அய்யர் கொல்லைப்புறம் ஓடினார். உண்மைதான்; மரத்திலிருந்து பச்சைப் பூ தொங்கிக் கொண்டிருந்தது.

உரிய காலத்தில் தார் முற்றினபின் அய்யர் அதை வெட்டிப் பழுக்கப் போட்டிருந்தார்.

ஒருதினம் அவ்வீட்டிற்கு புண்பட்ட மனதுடன் சபேசய்யர் வந்தார். குஞ்சு அய்யரின் பாலியநண்பர் சபேசய்யர். இப்பொழுது நாகர்கோவிலில்இருந்தார். வெகு நாட்களாய் எங்கும் சென்றதில்லை. பத்து நாட்களுக்கு முன்பே "இஷ்டம் போல் பிரயாணம்" டிக்கட் வாங்கிக்கொண்டு மதுரை, திருச்சி, தஞ்சாவூர், சிதம்பரம் முதலிய இடங்களுக்குப் போய்விட்டுக் கடைசியில் சென்னைக்குச் சென்றார். அங்கே தமது பெரிய தகப்பனாரின் பிள்ளையாகிய சங்கரன் வீட்டில் இரண்டு நாள் தங்க உத்தேசித்தார். சங்கரனுக்கு மாதம் எண்ணூறு ரூபாய் சம்பளம். இருந்தாலென்ன! எண்ணாயிரம் ரூபாய்கள் சம்பளம் வாங்கினாலும் சென்னையிலிருப்பவர்களுக்கு எண்பதினாயிரம் நிர்ப்பந்தச் செலவுகள் ஏற்படுகின்றன வல்லவா? தவிர பட்டணங்களின் நாகரீகமே வேறு. கிராமங்களில் உறவினர் வீட்டுக்குச் சென்று மாதக் கணக்காய் தங்கியிருப்பது சகஜம். அதை அதிதி, விதிதி இருவரும் வித்தியாசமாக எண்ணமாட்டார்கள். ஆனால் சென்னையில் உறவென்று சொல்லி ஒரு வேளைச் சாப்பாட்டை எதிர் பார்ப்பதும் தவறு. அநாகரீகமாகும். "ஸ்பான்ஜிங்" என்றும் மரியாதை யற்றவர் என்றும் கருதப்படுவார். சபேசய்யர் இதைச் சட்டென்று தெரிந்துகொள்ளும் படியாயிற்று. மனிதர் மானி. ஆகையால் உத்தேசித்த விதம் இரண்டு தினம் தங்காமல் முதல் தினமே அங்கிருந்து புறப்பட்டு விட்டார். ஆனால் திருநெல்வேலியில் பிறந்தகத்திலிருக்கும் இவருடைய சம்சாரத்தை மறுதின வண்டியில்தான் தன்னுடன் வந்து சேர்ந்து கொள்ளுமாறு எழுதியிருந்தார்.

ஒருநாள் பொழுதைக் கழித்தாக வேண்டும். சபேசய்யருக்கு எந்த ஊருக்கும் யார் வீட்டிற்கும் செல்ல சங்கோஜமாயிருந்தது. திருச்சிக்கு மறுபடி வந்து பாதி நாளைக் கழித்துவிட்டு, விருது நகரிலிருக்கும் தமது பாலிய நண்பராகிய குஞ்சு அய்யரைப் பார்க்க வந்தார். ஆனால் சாப்பாட்டிற்குத் தங்காமல் பார்த்துவிட்டு உடனே மறுவண்டியில் புறப்படும் ஏற்பாட்டுடன் வந்தார்.

சபேசய்யரைப் பார்த்ததும் குஞ்சு அய்யருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. விருது நகர் பெரிய பட்டணமுமல்ல, திவ்ய ஸ்தலமுமல்ல. அங்கே யார் வருகிறார்கள்? புது முகம் பார்க்காமல் குழந்தைகள்கூட ஏங்கிப் போயிருந்தன. தகப்பனாரும் இரண்டு பிள்ளைகளுமாய்

சபேசய்யரைச் சுற்றிக்கொண்டு செய்த உபசாரத்தை அவரால் தாங்க முடியவில்லை. "சாப்பிடாமல் எப்படிப் போவாய்? கூடவே கூடாது" என்று குஞ்சு அய்யர் வற்புறுத்தினர். கண்டிப்பாய் அடுத்த ரயிலில் போய்த் தீர வேண்டும் என்றார் சபேசய்யர்.

இதுதான் நல்ல தருணம்.

"ஏய் சுந்தரம், கொண்டா அந்த செவ்வாழைப் பழத்தை." என்று கம்பீரமாக ஆக்ஞையிட்டார் குஞ்சு அய்யர். தகப்பனர் சொல்லி வாய் மூடு முன் பையன் செவ்வாழைப்பழச் சீப்பு ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

"இதைச் சாப்பிடுங்கள், மாமா. எங்கள் கொல்லையில் காச்சுது" என்றான்.

"நீ ஒன்று எடுத்துக்கொள்" என்றார் சபேசய்யர்.

"உள்ளே நிறைய இருக்கே!" என்றான் பையன்.

உள்ளே நிறைய என்ன இருக்கிறது? எண்ணூறு பழமிருக்கிறதா, அல்லது எண்பதுதானிருக்கிறதா? ஒன்றுமில்லை. ஒரு சீப்பிற்கு ஏழெட்டு பழம் வீதம் நாலு சீப்புகளே இருந்தன அந்தத் தாரில். ஆனல் இவன் கூறும் அலட்சியத்தை நோக்கினர். வீட்டுத் தோட்டத்தில் வாழைத் தார்களே நிறைந்திருக்கும் போலவும், அவனுடைய வாழ்க்கையில் இப்பழங்கள் மிகத் துச்சமானவை போலவும் காணும். ஒரு வருஷமாய்க் கனவு கண்ட வஸ்துவல்ல.

பிறகு நால்வருமாக அந்தச் சீப்புப் பழத்தை உண்டனர். அதன் ருசியை எப்படி வர்ணிப்பது?

சபேசய்யர் பழத்தைப் புகழ்ந்து விட்டு நேரமாயிற்றென்று ரயிலுக்குப் புறப்பட்டார். குஞ்சு அய்யரும் அவருடைய பிள்ளைகளுமாக நிர்ப்பந்தித்து இன்னும் இரண்டு சீப்புப் பழங்களை எடுத்து அவருடைய கையில்வைத்து, "வந்தவர் வெறுங்கையாகப் போகக்கூடாது. கட்டாயம் எடுத்துக்கொண்டு போகணும்" என்றார்கள்.

"நல்லவேளை வந்தவருக்குக் கொடுக்கும்படி இது பழுத்திருந்ததே!" என்று சந்தோஷித்தார் குஞ்சு அய்யர்.

அவருடைய குழந்தைகளுடைய முகத்திலும் பெருமையும் சந்தோஷமுமே விளங்கின. குறை ஒன்றையும் காணேம். ஒருமணி நேரத்திற்காகிலும் தினப்படி இருக்கும் சாரமற்ற தரித்தர வாழ்க்கையையும் பழையதையும் மறந்து, வந்த விருந்தினரைத் தக்க கௌரவத்துடன் உபசரித்தார்களல்லவா! விருது நகரில் செவ்வாழைப்பழம் கொடுத்து உபசரிப்பதென்றால் அது லேசா! பண்ணை வீட்டு நடேசபிள்ளையால் கூட அது முடியாதே!

---

ஜெர்மனி யூதர்களைக் கொடுமை செய்வதைக் கண்டித்து கான்டர்பரி ஆர்ச் பிஷப் எழுதியிருப்பதன் சாராம்சம்:

"ஜெர்மனியுடன் சமாதானமாய் வாழ வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படும் இந்த சமயத்தில் இவ்வார்த்தைகளை எழுதுவது ரஸக் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனல் சில சமயங்களில் மனித உணர்ச்சி மௌனமாக இருக்க முடிவதில்லை. இது மாதிரி அவர்கள் வைஷம்யத்தையும் துவேஷத்தையும் காண்பிப்பது நம் சிநேக பாவத்தைக் கெடுத்துவிடும் என்பதை ஜெர்மனியை ஆளுபவர்கள் அறிவார்களா?"

"எனக்குப் பேசுவதில் அவ்வளவு சாமர்த்தியமில்லை. ஆனல் நன்றாக யோஜனை செய்வேன். அந்த விஷயத்தில் எனக்குத் தோல்வியேற்பட்டது என்று கூறுவது பிசகாகும். நான் மந்திரிப் பதவி வகித்தபோது, நான் கிழந்தட்டிப்போய் பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டும் அல்பத்தனமாய் பேசிக்கொண்டும் இருப்பதாக என்னிடம் வேலை செய்பவர்களுக்குத் தோன்றினல் உடனே என்னை ஒரு அறையில்போட்டுப் பூட்டிவிடும்படி கூறியிருக்கிறேன். நான் இந்த முதல் காரியத்தை நிச்சயம் செய்யவில்லை. இரண்டாவது காரியத்தையும் நான் செய்யவில்லை என்று நம்புகிறேன்."

—லார்ட் பால்ட்வின்

# ஹீராகுணி

(டி. என். குமாரஸ்வாமி)

ஹீரா பால் விற்கும் ஓர் இடைச்சி. குணி என்ற நல்ல ஜாதிப் பசு அவளிடம் இருந்தது. ஹீராவுக்குக் கையில் ஒருமாதத்துப் பச்சைக் குழந்தை. பசுவும் கன்று போட்டு ஒரு மாதமே ஆயிற்று.

ராயகட் மலையைத் தாண்டி, மராட்டிய அரசன் சிவாஜிக்கு அவள் பால் கொண்டு தருவது வழக்கம். புல்லையே மேய்வதனால் குணி என்ற ஆவின்பால் அம்ருதம்போல் ருசியாக இருக்கும். சிவாஜி அந்தப் பாலையே பருக விரும்புவார். இதனால் பால்காரி ஹீராவுக்கும் தகுந்த காசு கிடைத்தது. ஆனால் சிவாஜியின் வேட்கை தீர்ந்ததே ஒழிய, குணியின் கன்று மட்டும் சற்றும் தன் தாய் மடியில் ஊறும் பால் இல்லாமல் பட்டினி கிடந்தது. இளைத்து வந்தது. ஹீரா இதைக் கண்டும் கொஞ்சமேனும் இரங்கவில்லை. தன் கன்றை அடைய 'அம்பா' என்று அலறும் குணி. மக்கச் சக்கரம் பண்ணிக்கொள்ளும் கட்டுண்ட இடத்திலேயே. பாலுக்கு ஏங்கி மண்டை வீங்கக் கன்று தன் தாயின் மடியை நோக்கி வர எத்தனிக்கும். ஆனால் கயிறு அதன் கழுத்தை இறுக்கும். ஹீரா பால் கறந்து கொள்ளும்போது கன்றை அவிழ்த்து சிறிது நேரமே ஊட்டவிடுவாள். அதற்கு ஒரு சொட்டுப் பால்கூட விடாமல் பசுவின் மடி சிவுங்கும்படிக் கறந்துகொண்டு விடுவாள். கன்று பாட்டிற்குச் சுற்றிச் சுற்றிக் குரல் தடுமாறக் கதறும், ஒருவாய்ப்பாலுக்கு. பசுவும் திரும்பித் திரும்பித் தன் கன்றை நக்கிக் கொடுக்க அலைபாயும். ஹீரா கன்றுக் குட்டியை ஏன் கவனிக்கப் போகிறாள்? சிவாஜி ராஜாவுக்குக் காலையும் மாலையும் நிறையப் பால் தர வேண்டுமே! கோட்டைக்குச் சென்று பாலை ஊற்றிவிட்டுக் காசுடன வீட்டிற்குச் சீக்கிரமே திரும்பிவந்து விடுவாள் ஹீரா. கைக்குழந்தை பசி தாளுமா? முதலில் தன் குழந்தையை எடுத்துவிட்டு அதைத் தூங்கப் பண்ணியதும், கன்றுக்குட்டியை அவிழ்த்து அதன் தாயிடம் விடுவாள். ஆனால் பால் எங்கிருந்து பசுவின் மடியில் சுரக்கும்? கன்று வெறும் காம்புகளையே சப்பிக்கொண்டிருக்கும். பசுவும் அதை ஆதரவுடன் நக்கிக்கொடுக்கும். ஆனால் வெகுநேரம் கன்றை விட்டுவிட்டால் மறுநாள் காலையில் பால் இல்லாது போய்விடுமே யென்று ஹீரா அதை உடனே வேறொரு இடத்தில் கட்டி விடுவாள். சிவாஜி மன்னனுக்கு அன்றாடம் சுவைமிகுந்த பால் கிடைத்துக்கொண்டிருந்தது.

ஒருநாள் மாலை வழக்கப்படி பாலைக் கொண்டுதர மலையிலுள்ள கோட்டைக்குச் சென்றிருந்தாள் ஹீரா. அன்று அரண்மனைக் கணக்கன் பால்பணத்தைத் தீர்த்துக்கொடுக்க சற்று நாழிகை ஆகிவிட்டது. பொழுது சாய்ந்து இருட்டிவிட்டது. கோட்டையில் இரவு மணியும் அடித்துவிட்டது. கீங் கீங் யென்று கோட்டையின் வாயிற் கதவும் மூடப்பட்டது. ஹீரா துவாரபாலகனைப் பார்த்து, "அப்பா, கதவைத் திற, நான் போக வேண்டுமே" என்றாள். "அம்மா, உத்தரவில்லையே" என்றான் காவலாளி. ஹீராவின் மனது தன் குழந்தைக்காக அடித்துக்கொண்டது. அவள் கண்ணீர் பெருக்கி, "அப்பா! என் குழந்தை பட்டினி கிடக்கிறதே. நான் போய்ப் பால் கொடுக்க வேண்டுமே. கதவைத் திறந்துவிடேன். உன் காலைப் பிடித்துக் கொள்கிறேன்" என்று மன்றாடினாள். ஆனால் சிவாஜியின் உத்தரவின்றிக் கதவைத் திறந்துவிடக் காவலாளி அவ்வளவு தலை படைத்தவனா என்ன? ஹீராவின் வேண்டுகோள் ஒன்றும் பலிக்கவில்லை. இரவு அதிகரிக்க அதிகரிக்க ஹீராவின் இதயம் வேகயாகத் துடித்தது. அவளுடைய மார்பு குழந்தைக்குப் பால்தர விண் விண்ணென்று வேதனைப்பட்டுத் துடித்தது. கோபமும் துக்கமும் ஒருங்கே கலந்துவரத் தன் பலம் கொண்டவரை கதவின் சங்கிலியைக் குலுக்கி, "கதவைத் திறக்கிறாயா இல்லையா?" என்று கூவினாள். அது எஃகுச் சங்கிலியாயிற்றே! "உத்தரவு இல்லை" என்று சொல்வதுபோல் சங்கிலியும் சலுங்கென்றது.

இரவு அதிக நேரமாகிவிட்டது. சுக்ர நக்ஷத்திரம் கோட்டையிலுள்ள பவானி தேவியின் ஆலயத்தின் கோபுர உச்சியில் தொங்கிக்கொண்டிருந்தது. நிசாசர பக்ஷிகள் இங்குமங்கும் விகாரமான அரவத்துடன் பறந்து சென்றன. அவற்றின் விகடாரவம் கோட்டையின் மதிலைத் தாக்கி எதிரொலிக்கும். அப்போதெல்லாம் ஹீராவின் இதயம் படபடவென்று திடுக்கிடும். உடல் வியர்க்கும். "ஐயோ ¡ எனக்கு இறகு இருக்கக் கூடாதா? என்

குழந்தையின் கதி என்னவாயிற்றோ?'' என்று ஏங்கும் அவள் நெஞ்சம். மலையின் அடிவாரத்தில் ஹீராவின் குடில். இந்த மைச்சிமிழ் இருட்டில் எப்படிப் போவது? கோட்டையை விட்டு வெளியேற வழிதான் எங்கே? அவளுக்கு என்னவோ தோன்றிற்று. பால் குடுவையை மதில்சுவரின்மேல் வீசி எறிந்தாள். அது நூறு சுக்கலாக உடைந்தது. அந்த ஸாஹஸக்காரி வெளியே போக வழிதேடப் புறப்பட்டுவிட்டாள். ராய்கட் கோட்டையின் ஒருபுறம் செங்குத்தான மலையே அரணாக இருந்தது. அந்தப் பக்கமாக கீழே இறங்குவதோ நடக்காத காரியம். முதலையின் கூரிய பற்களை யொத்துப் பாறைகள் பல இடங்களில் இருந்தன. கீழே இறங்குவதற்கு அங்கு யாதொரு ஆதாரமும் கிடையாது,— அந்தப் பாறைப் பற்களைத் தவிர. மதி எங்கேயோ அங்கே தான் வழியும்? அஸ்தமிக்கும் பிறைச் சந்திரன் சற்றே வெளிச்சம் தந்தது. கீழே நோக்கினால் அகாத பள்ளம். ஒரு தீர புருஷனுடைய உள்ளமும் நடுங்கக் கூடியபாதாளம். எப்படி ஹீரா இறங்கப் போகிறாளோ? ஆனால் சிசுவுக்காகப் பரிதவிக்கும் அந்த மாத்ரு ஹ்ருதயம் அந்தப் பயங்கரத்தைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. துர்க்கத்தின் தேவதையான பவானியை ஸ்மரித்து, இறங்க ஆரம்பித்தாள் ஹீரா......தன் குடிலை அடைந்தபோது தான் அவளுக்கு ஸ்மரணை வந்தது.

குழந்தை அழுது அழுது அலண்டுபோய்த் தூங்கிவிட்டது. நடுநடுவே பசியின் மிகுதியால் விக்கல் அதைக் குலுக்கிப் போட்டது. குணியின் கன்று பசி தாளாமல் கயிற்றை அறுத்துக்கொண்டு தன் தாயின் இனிய பாலை ஊட்டிக்கொண்டிருந்தது. பால் நுரை அதன் வாய் வழியாகக் கீழே வழிந்தது.

ஆனால் இதை ஹீரா கவனிக்கவில்லை. ஓடிப்போய்த் தன் குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு கண்ணீர்த் துளி பெருகப் பால் கொடுத்தாள். குழந்தையும் ஆத்திரம் ஆத்திரமாகப் பாலைப் பருகவே அதற்குப் புரையேறிற்று. கன்றுக்குட்டியை அவள் அன்று அதன் தாயிடமிருந்து பிரித்துக் கட்டவே இல்லை. கன்றும் என்றுமிராத இந்த பாக்கியம் கிட்டவே தொழுவத்தில் அந்த நள்ளிரவில் குதித்து விளையாடியது. அதன் நெடுநாள் பசியும் அடங்கியது.

காலை புலர்ந்து வெகு நேரமும் ஆகிவிட்டது. ராய கட்டின் அரசனுக்கு இன்னும் பால் வரலில்லை. பால் வரும் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்தார். ஹீரா கோட்டைக்கும் போகவே இல்லை- அரசனுடைய பசியைத் தணிக்க ஏவலாட்கள் ஹீராவின் குடிலை நோக்கிப் பறந்து வந்தனர். அவர்கள் பாலைக் கேட்கும்போது, "இன்றைக்குப் பால் கிடையாது, மாடு உதைத்துவிட்டது" என்றாள் ஹீரா சற்றும் தயங்காமல். "அதெல்லாம் தெரியாது. நேரே மஹாராஜாவிடம் வந்து பதில் சொல்!" என்று கிங்கரர்கள் ஹீராவைக் கோட்டைக்கு இட்டுச் சென்றனர். அந்தத் தீர ரமணியும் நடுங்காமலே மஹாராஷ்ட்ர சிங்கத்தின் எதிரே நின்று நடந்ததைக் கூறிவிட்டாள், சிவாஜி அவளுடைய ஸாஹஸத்தை மெச்சி ராயகட்டைச் சுற்றியுள்ள ஜாகீரை அவளுக்குப் பரிசிலாக அளித்தான். எந்த வழியே உயிரைத் திருணமாக எண்ணி ஹீரா அன்றிரவு வெளியேறினாளோ, கடத்தற்கரிய அம்மலை வழிக்கு, மொகலாயப் படையை வென்ற மன்னன் 'ஹீராகுணி' என்று பெயர் சூட்டினான்.

—(ஸ்ரீ அவனீந்திரநாத டாகுர் வங்காளியில் எழுதியது.)

---

## குண்டு பாயாத கோபுரம்

ஜெர்மனியின் மிகப் பெரிய விமான ஆராய்ச்சிச் சாலையில் காணப்பட்டவைகளுள், மிகவும் அதிசயமானது, குண்டு வீச்சுகளினின்றும் ஜனங்களைக் காப்பதற்காக, ஏற்படுத்தப்பட்ட ஓர் உயர்ந்த கோபுரம். உருளை வடிவான அக் கோபுரம் 250 அடி உயரமுள்ளது. குண்டு வீச்சு காலங்களில், அது 585 நபர்களுக்கு ரக்ஷணை அளிக்குமாம். இந்த மாதிரி கட்டிடம் ஜெர்மனியைத் தவிற வேறு எங்கும் இல்லையென்று, பல தேசங்களிலிருந்து அதைக் காண வந்திருந்தவர்களின் கருத்து.

அதில் மூன்று அடுக்கு மாடி யுள்ளது தரை அறையில் 175 பேர்கள் உட்கார பெஞ்சுகள் போட்டிருக்கிறதாம். முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, மாடி அறைகளில், முறையே, 140, 120, 140, பேர்கள் தங்க வசதி இருக்கிறதாம். அதில் ஒதுங்க வந்தவர்கள் முதலில் தரையின் கீழுள்ள ஒரு சந்தின் வழியாக தரை அறைக்கும் செல்லலாம். இவர்கள் உள்ளே சென்ற பிறகு அந்த சந்து கெட்டியாக மூடப்படும்.

—ராய்ட்டர்

# மதுரை புஷ்பவனம் அய்யர்

(ஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.)

புஷ்பவனம் அய்யர் இறந்துபோய் சுமார் இருபது வருஷ காலம் ஆகிறது. இறக்கும்பொழுது அவருக்கு வயது இருபத்தெட்டு. இன்றையதினம் அவர் இருந்தாலும் மும்முரமாக கச்சேரி செய்யக் கூடிய தான வயதாகத் தானிருக்கும்.

ஆனல் நமது துர்ப்பாக்கியம் அவர் அல்பாயுஸில் இறந்து விட்டார். இப்பொழுதும் அவருடைய கீர்த்தி மறையவில்லை. அவரது கானத்தைக் கேட்டவர்கள் அதை இன்றும் நினைத்து நினைத்து உருகுகிறார்கள்.

அவருடைய பரம்பரையில் இப்பொழுதும் சங்கீதம் நிலைத்திருப்பதால், அவருடைய ஞாபகம் நமக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. மதுரை மணி என்பவர் அபாரமான வித்வத்தை அடைந்திருந்தும் புஷ்பவனத்தின் தமையன் பிள்ளை என்ற பட்டத்தை செல்வாக்குடன் வகித்து வருகிறார். அவருடைய பெண் ஸ்ரீமதி ராஜம் புஷ்பவனம் ஸங்கீத உலகில் பிரஸித்தி பெற்றுவருகிறார்.

புஷ்பவனம் அய்யர் ஒரு பாகவத பரம்பரையில் உதித்தவர். பூர்வீகம் திருச்சினாப்பள்ளி ஜில்லா என்று தெரிகிறது. அவர் தகப்பனார் பாகவத சம்பிரதாயமாக இருந்ததாகவும் தெரிகிறது. புஷ்பவனம் அய்யரின் தமையன், ராமஸ்வாமி அய்யர் என்பவர், (மதுரை மணியின் தகப்பனார்) சங்கீதத்தில் உள் ஊற்றமுள்ள ஞானமுடையவர். அவர் ஒரு சமயம் கதா காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தார். சிறுவனாய் இருந்த சமயம், புஷ்பவனம், அவருக்குப் பின் பாட்டுப் பாடுவதுண்டு. இவர்கள் தகப்பனார் காலத்திலேயே மதுரை வாசிகளாக ஆனார்கள். ராமஸ்வாமி அய்யர் ராமநாதபுரம் ஸப் கோர்ட் கிளார்க்காக அநேக வருஷ காலம் வேலை பார்த்து வந்தார். புஷ்பவனத்திற்கு ஆங்கிலப் படிப்பு முதலில் ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், அது தொடர்ச்சியாக நடக்கவில்லை. அதற்கு அவரது சங்கீத ஊக்கமே காரணம். அவருடைய ஞானம் வெகுவாகக் கேள்வியினாலேயே ஏற்பட்டது; ஆனாலும், எட்டியாபுரம் ராமச்சந்திர பாகவதரிடம் சேர்ப்பிக்கப்பட்டு, சுமார் ஒருவருஷ காலம் அவரிடம் சிக்ஷை பெற்றார். பிறகு அவர் தன்னுடைய சங்கீதக் கலையை, சொந்த முயற்சியினால், வளர்த்துக் கொண்டு வரும் சமயத்தில், மதுரையில் ராம அய்யங்கார் என்பவர், அவருக்கு மிகவும் ஆதரவு காட்டி வந்ததாகத் தெரிகிறது. அந்த கனவான் சுயமாகவே நன்றாகப் பாடக்கூடிய சங்கீத ஞானமுள்ளவர்.

புஷ்பவனம் அய்யர் சுமார் பதினெட்டு வயதிலேயே கச்சேரி செய்ய ஆரம்பித்தார். இவர் தஞ்சாவூர் ஜில்லாவில் முதல் முதலில் கியாதி அடைந்ததைப்பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. கும்பகோணத்தில் ஏதோ ஒரு உத்சவ சம்பந்தமான பொதுக் கச்சேரி நடக்கும் சமயத்தில், ஒரு நாள் விளம்பரப்படி பாடவேண்டிய ஒரு வித்வான், சமயத்துக்கு வரமுடியாமல் போய் விட்டது. அச்சமயம் அங்கு கூடியிருந்த ஏராளமான ஜனங்களை அமைதியுடன் இருக்கச் செய்வது எவ்விதமென்று, பொறுப்பாளிகளான சங்கீத வித்வான்கள் கவலையுடன் ஆலோசனை செய்து கொண்டிருக்கும்பொழுது, அங்கு விஜயம் செய்திருந்த புஷ்பவனம், தனக்கு அச்சபையில் பாட இடந்தர வேண்டும் என்று வணக்கமாகக் கேட்டுக் கொண்டாராம். பொறுப்பாளிகள் அரைமனதாக சம்மதித்தவுடன் பாட ஆரம்பித்தாராம். அவருடைய சங்கீதத்தில், அம்மகா சபையானது உடனே பரவசப்பட்டு விட்டது. வித்வான்களும் தங்கள் கோஷ்டியில் சேரக்கூடிய ஒரு அரிய சங்கீத ரத்னம், தங்கள் இடையில், எதிர் பாராமல் தோன்றியதற்காக மனம் மகிழ்ந்தார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு அவருக்கு, கலைக் களஞ்சியமாகிய தஞ்சை ஜில்லாவில், கீர்த்தி வளர்ந்து வந்தது. சுமார் நான்கு வருஷத்திற்குள், அவர் சென்னை மாகா

ணம் முழுவதும் கச்சேரிகள் செய்யும்படி ஏற்பட்டது. எப்பொழுதும் தந்திக்குமேல் தந்தியாக வந்து கொண்டிருந்தது.

புஷ்பவனம் அய்யர் திடசரீர முடைய வரல்லர். மிக்க அழகு வாய்ந்த மெல்லிய தேக முடையவர். அவருடைய வாழ்நா ளில் அவர் இரண்டு மூன்று தடவை வியாதியில் வீழ்ந்து விட்டார். இரண்டு மூன்று வருஷம் பாடுவதும் பின்பு இரண்டொரு வருஷம் சரீர அசௌகரி யத்தால் பாடாமலும் இருந்து வந்தார். இந்த நிலையில் இருந்தும் அவருடைய திக் விஜயம் ஆச்சரியமானது; அவருக்கு சம காலமாக பாடிக் கொண்டிருந்தவர்கள் ராம நாதபுரம் சீனிவாஸ அய்யங்கார் அவர் களுக்கும் கோனேரிராஜபுரம் வைத்திய நாதஐயர் அவர்களுக்கும்கூட புஷ்பவனம் தலை கிளப்பிய பிறகு கொஞ்சம் 'மவுஸ்' குறைவுதான் ஏற்பட்டது. இதனால் ஞான பாவத்தில் அப்பெரியோர்களைவிட புஷ்ப வனம் மேல் பட்டவர் என்று சொல்ல முடியாது.

ஆனாலும் கோவிந்தசாமி பிள்ளை பிடி லும், அழகன் நம்பி மிருதங்கமும், தக்ஷிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிராவும், புஷ்பவனம் அய்யர் வாய்ப்பாட்டும் தென்னிந்தியாவில், கொஞ்ச நாளைக்கு, இடைவிடாது, நித்திய மங்களமான நிகழ்ச்சிகளாக இருந்தன. இதன் மர்மத் தை எப்படி விவரிப்பது? சிலர் புஷ்ப வனத்தின் சாரீரத்தையே மெச்சிப் பேசு வார்கள். அதுவும் உண்மைதான். ஆனால், அதுமட்டும் தானா? அவருடைய சங்கீதத் தில், ஒரு நூதனமான வசீகரம் இருந் தது. அதற்கு சாரீர இனிமை மட்டிலும் காரணமல்ல, பாடும் வழி என்று ஒன்றும் இருக்கிறது. அதை சுய உணர்ச்சியில் அறிந்து கொள்ள முடியாதவர்களுக்கு, எடுத்துக்கூற முடியாது. எல்லாக் கலைகளி லும் வழி என்பது ஓர் மர்மம். வடமொழி யில் அதை மார்க்கம் என்றும் ரீதி என் றும் பந்தா என்றும் சொல்லுவார்கள். புஷ்பவனத்திடம் சாரீரமும் "பந்தா"வும் அமைந்திருந்தன. இந்த "பந்தா"வின் அமைப்புக்கு இன்றியமையாதது ஆத்மா னுபவம். அவர் மகிழ்ந்துபாடி பிற ருக்கும் மகிழ்ச்சியை உண்டு பண்ணின தால், அவருடைய சங்கீதம் சிறப்படைந் தது.

நான் அவருடைய கானத்தை அதிக மாகக் கேட்டதில்லை. நாலைந்து கச்சேரி கள்தான் கேட்டிருக்கிறேன். ஆனால் அவருடைய கானத்தை ஒருதரம் கேட் டால் போதும். லோகாதீதமான சக்தி கொண்ட ஒரு வஸ்துவை நாம் தெரிந்து கொள்வது நமக்குக் கண் திறப்பதுபோல் ஒரு திவ்யமான அனுபவமாகின்றது. இத்தகைய அனுபவம் ஒரே தடவையில் ஏற்படுவதற்கும், பல தடவையில் ஏற்படு வதற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? சாதாரணமான அனுபவத்திற்குப் பல முறை தொடர்ச்சியினால், திருடீகரணம் ஏற்படுவது இயல்பு. இந்த நியாயம் லோகா தீதமான அனுபவத்திற்குக் கிடையாது. அதைக் கண்டதும் களிக்கவேண்டியது தான். பிறகு அனுஸந்தானமும் அனு பவத்திற்கேற்ற இன்பத்தைத் தரக்கூடிய தாக இருக்கிறது. புஷ்பவனத்தின் சங் கீதத்தை நான் கேட்ட அன்றையதினமே ஜன்மாந்தரங்களில் கேட்டு அனுபவித்த வாஸனைரூபமாக, அந்தரங்கத்தில் பதுங்கி யிருந்த ஆனந்த வெள்ளத்தின் மடை திறந்து விட்டது. சங்கீதமென்றால் எப்படி யிருக்கவேண்டும், எவ்வித இன்பத்தை அளிக்கவேண்டும், என்ற அறிவு உதிக்க லாயிற்று. இதற்குமேல் எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

புஷ்பவனம் அய்யருடைய சங்கீதத் தின் பெருமையை காலஞ்சென்ற ரஸிக சிகாமணியாகிய திருப்பயணம் பஞ்சாப கேச சாஸ்திரிகள் அவர்கள் ஒரு சம யம் எடுத்துக் கூறினார். திருவையாற்றில் சாஸ்திரிகள் அவர்கள் தலைமையாயிருந்து தியாகையர் அவர்களுடைய உத்ஸவத்தை நடத்திவந்தார். அவ்வுத்ஸவம் இப் பொழுதும் நடந்துவருகிறது. உத்ஸவ காலத்தில் இடைவிடாது, பத்துநாளைக் கும் கச்சேரிகளும், இருவேளை பிராம்மண போஜனமும் நடக்கும். இதற்கு வித் வான்கள் ஒன்று சேர்ந்து தியாகையரிடம் தங்களுக்கிருக்கும் பக்தியையும், கிருதக் ஞதையையும் தெரிவிப்பதற்காக, பல இடங்களில் கச்சேரிகள் செய்து, பணம் சேகரித்து வருவார்கள். பிரஸித்தி

பெற்ற சங்கீத வித்வான்கள் மட்டுமல்லாமல், பிரஸித்திக்கு வரவேண்டிய குட்டி வித்வான்களும் பாடுவது உண்டு. இந்த உத்ஸவம் நடத்திவைப்பதில் புஷ்பவனம் அய்யர் மிகவும் ஈடுபட்டிருந்தார். அவருக்குச் செல்வாக்கு இருந்த சமயத்தில் இதற்கு ஏராளமான திரவியம் உதவி செய்திருக்கிறார். சாதாரணமாக இந்த உத்ஸவத்தில் பெரிய கச்சேரிகள் சாயங்காலம் நடக்கும். அதாவது, நாலரை, ஐந்துமணி முதல், ஏழரைமணி வரை ஒரு கச்சேரி; ஏழரை முதல் பத்துவரை ஒரு கச்சேரி; நடுவில் "இண்டர்வல்" கிடையாது.

ஆனால் சாப்பாடு ஏழரைமணிக்கு. கூட்டம் எப்பொழுதுமே அதிகமாக இருக்குமாகையால் முதற்பந்தியில் இடத்தைப் பார்த்துச் சாப்பாட்டிற்கு உட்காருவதற்கு அமளிப்படும். ஜனங்கள் கச்சேரிகளுக்கிடையில் சாப்பாட்டிற்காக முதலில் போவதற்கு எழுந்து போவதும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மறுபடி வந்து உட்காருவதும் அன்றைக்கும் இன்றைக்கும் நடக்கும்சம்பவம். அந்த வருஷம் ஒருநாள் சாயங்காலம் ஒரு பிரபல வித்வானுடைய கச்சேரி நடந்தது. விளம்பரப்படி இரண்டாவது பெரிய கச்சேரி, இரவில்ஏழரைக்கு ஆரம்பிக்கவேண்டியது புஷ்பவனம்அய்யர் செய்யப்போவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்றையதினம் முதல் கச்சேரி முடிந்தது. ஆனால் முறைப்படி அந்த கூட்டத்திலுள்ள ஒருவராவது சாப்பாட்டிற்கு எழுந்திருக்கவேயில்லை. ஆனால் வெகு நெருக்கமாக எவ்வித அசௌகர்யத்தையும் பொறுத்துக்கொண்டு, பிற்பகல் முதற்கொண்டே இடத்தைப் பொத்திவைத்திருக்கும் திரள் திரளான ஜனங்கள் புஷ்பவனத்தின் கச்சேரி ஆரம்பத்தை ஏகமுகமாக எதிர்பார்த்த வண்ணம் அசைவற்றிருந்தார்கள். நின்றவர் நின்றபடியும், சாய்ந்தவர் சாய்ந்தபடியும், கால்களை மாற்றிக்கொள்வதற்குகூட அவகாசமில்லாமல், உட்கார்ந்திருந்தவர் உட்கார்ந்தபடியும், ஸங்கீத ஆனந்தத்தில் நெருக்கடிக்குச் சகஜமான பல அசௌகர்யங்களையும் பொருட்படுத்தாமல் மெய்ம்மறந்து, இரவு பத்துமணி வரையில் அந்த சமாஜம் சித்திரத்தில் வரையப்பட்டது போல் அமைந்திருந்தது. புஷ்பவனம் பாடி முடிந்தவுடன் சாஸ்திரிகள் அவர்கள் இந்த விஷயத்தையே எடுத்துக்காட்டி, மற்ற சங்கீதத்திற்கும் புஷ்பவனத்தின் சங்கீதத்திற்கும் உள்ள பேதத்தை இதன் மூலமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமெனப் பிரசங்கம் செய்தார்.

---

## ஆசிரியர் அறிக்கை

"பாரதமணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

## அறிக்கை

"பாரதமணி" நிர்வாக சம்பந்தமான எல்லா கடிதப் போக்குவரத்துக்களும், விளம்பரங்கள், பிளாக்குகள் யாவும் "மானேஜர்" பாரதமணி, 7 வடக்கு மாடவீதி, மைலாப்பூர் சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். விளம்பரங்கள் யாவும் புதன்கிழமைக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். பாரதமணியில் மதிப்புரைக்கு அனுப்பப்படும் புத்தகங்களும் மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

மானேஜர்.